AstroVed

# சத்வித்யா

மாலை: 1 மலர்: 29

எஸ்பி -75, சிட்கோ தொழில்துறை எஸ்டேட், அம்பத்தூர், சென்னை - 600058.

ஆன்மீக விஞ்ஞான இதழ்

இணையதளம் வாயிலாக மாதம் ஒரு முறை வெளிவரும்



## நினைத்ததை நிறைவேற்றும்

வெள்ளெருக்கு விநாயகர்



## ஆசைகளை நிறைவேற்றும்

வஜ்ரேஸ்வரி எந்திரம்

## திருமண தடை நீங்க

எளிமையான லால் கீதாப் பரிகாரங்கள்

## ஸ்ரீ சமயபுரம் மாரியம்மன் திருவடிகளே சரணம்

அனைத்து இதழ்களையும் AstroVed.com இணையதளத்தில் இலவசமாக டவுன்லோடு செய்து பயன் பெறலாம்

மேலும் விபரங்களுக்கு போன்: 88702 88701, www.astroved.com



போன ஜென்மத்தில் நாம் என்ன செய்து கொண்டிருந்தோம் என்ன நினைத்துக் கொண்டிருந்தோம் என்பதை அறிவதும் அறிவியல் தான! நினைவுத் திறன் அதிகமாக பரப்ப பட்டதாக இருந்தால் தான் நமது முற்பிறவி பற்றி அறிய முடியும். புத்தர், கடவுளே இல்லை என்றவர் ஆனால் முற்பிறவி என்பது உண்டு என நம்பினார். ஒரு விளக்கை ஏற்றினால், அதைக்கொண்டு அடுத்தது அதிலிருந்து இன்னொன்று என பல விளக்குகளை தொடர்ச்சியாக ஏற்ற முடியும். இப்படித்தான் கடந்து போன பிறவியின் நினைவுகள் நம்மை தொடர்ந்து கொண்டே இருக்கின்றன. ஆகையால் தான் பல பிரச்சனைகள் நம்மை தொடர்ந்து கொண்டே இருக்கின்றன. அடுத்து ஏற்ற முடியாமல் ஒரு விளக்கு அனைவதைப் போல் நமது மூளை முற்பிறவி நினைவுகளை எப்போது மறந்து, புதிய சிந்தனை பிறக்கிறதோ அப்போது தான் நமது பிரச்சனைகள் மறந்து புதிய வாழ்கை, புதிய பாதை பிறக்கும்.

Dr. Baskaran Pillai



“சத்வித்யா” வாசகப் பெருமக்களே! பெருந்தொற்று நம் நாட்டைப் பொறுத்தவரையில் ஆன்மபலம் எப்போதும் நம்மிடையே நிறைந்திருக்கும் காரணத்தால் கொடிய நோயின் தாக்குதலை மட்டுப்படுத்தி, அதோடு அரசின் கட்டுப்பாடுகளையும் கட்டளைகளையும் ஏற்று செயல்பட்டதனால் நாம் நிம்மதியை அடைந்து வருகிறோம்.

வேண்டிய அளவுக்கு மழை பெய்து விட்டது, வீணாகும் தண்ணீரையும் தண்ணீரால் வீணாகும் பயிர்களையும் காத்திட கட்டமைப்புகள் அவசியம் என்பதனை கடந்த மழைக்காலம் நமக்கு உணர்த்தியிருக்கிறது. அரசுக்கு அதனை வலியுறுத்தி ஆவன செய்வோம். அதிகபட்ச மழையை அனுபவித்த நாம் அதிகபட்ச வெயிலையும் எதிர்நோக்க வேண்டிய நிலையில் இருக்கிறோம். எச்சரிக்கை உணர்வோடு எதையும் சமாளித்து, இன்னொரு முறை நோய்த்தொற்று பெருந்தீமை விளைவிக்காத வண்ணம் கடைபிடிப்போம் கட்டுப்பாடுகளை! ஆன்ம பலமே அகிலத்தைக்காக்கும் என்கிற ஆன்மீக உண்மையை அகிலத்திற்கு உணர்த்தி, அலையாய் எழுந்து, ஆர்ப்பரிப்போம். நன்றி!

அன்புடன்
(அச்சிட்டு வெளியிடுவோர்)
ஆஸ்ட்ரோவேட்.காம்

அன்புடன்
Astroved.com

அன்பு சத்வித்யா வாசகர்களே! இதுவரை இணையதளத்தில் வெளியாகி, எல்லையில்லா ஆன்மீக செய்திகளை அள்ளித் தந்து கொண்டிருக்கும் நமது சத்வித்யா இணையதள மாத இதழ், வாசகர்களின் வேண்டுகோளுக்கிணங்க விரைவில் புத்தக வடிவில் உங்கள் கரங்களில் தவழவிருக்கிறது என்பதனை பெரு மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறோம்.

என்றென்றும் உங்கள் ஆதரவை வேண்டும், Astroved.com மாத இதழ்



# மார்ச் மாத காலண்டர் – 2022

| ஞாயிறு | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி |
|---|---|---|---|---|---|---|
| | | சிவராத்திரி  1 | அமாவாசை 2 | 3 | 4 | 5 |
| சதுர்த்தி 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 |
| 13 | ஏகாதசி 14 | பிரதோஷம் 15 | 16 | பவுர்ணமி 17 | 18 | 19 |
| 20 | சதுர்த்தி 21 | 22 | ஷஷ்டி 23 | 24 | 25 | 26 |
| 27 | ஏகாதசி 28 | பிரதோஷம் 29 | 30 | 31 | | |



# சர்வம் சிவமயம்

~ குடந்தை நாராயணி

நிகழும் மகா சிவராத்திரி புண்ணிய நாளில் கயிலைநாதன் சிவபெருமானை பற்றிய அபூர்வ செய்திகள் இவை!

சிவலிங்கம் என்பது என்ன? அதில் சிவனின் ஜோதி வடிவே அவர் அமர்ந்து காணப்படும் பாணம் சுட்டுவது ஆண் இனத்தையும் கீழ் பீடமான ஆவுடையார் குறிப்பது பெண் இனத்தையும் தான்.

ஆக சிவலிங்கம் உலகை படைத்த அடையாளமாகிறது.
மங்களம் என்பதை குறிக்கும் 'சிவன்' எனும் சொல்.

ஜீவனான சாதாரண மனிதன் தான் கொண்ட அளப்பரிய ஆசைகளை வேர்களுடன் அழித்துவிட்டால் அந்த தெய்வ சிவனாகவே ஆகிவிட முடியும் என்பார்கள்.
மனித வாழ்வின் நிலையாமை தன்மையை விளக்குவது நாம் தரிக்கும் சின்னமான விபூதி என்கிற திருநீறு.

பரமேசுவரன் கொண்ட வாகனம் ரிஷபம்.காமம் என்ற பொருளும் ரிஷபத்திற்கு தான்.

காமத்தின் அதிபதியான அந்தக் காமனையே அடக்கிய அதாவது அனைத்து ஆசைகளையும் அடக்கியவர் ஈஸ்வரன்.

இச்சிவபிரான் திரியம்கன் என்றும் விழங்கபடுகிறார்.அன்பகம் என்றால் ஆணை குறிப்பதாகும். அக்னி,சூரியன், சந்திரன் எனும் முக்கண்கள் உடைய இறைவன் இவர்.

பூமாதேவி என அழைக்கப்படும் இப்பூமி நமக்கு தாய் ஆக, மேல் வானம் நமது தந்தை ஆகிறார். இவற்றுக்கு தலைவனாக திகழும் சிவபிரானை காரணப் பெயரிட்டு அர்த்தநாரீஸ்வரர் என கொண்டாடி மகிழ்கிறோம்.

## லிங்க வகைகள்

வெள்ளியில் உருவாக்கப்பட்ட சிவலிங்கம் கொண்ட பெயர் ரஜத லிங்கம் ஆகும்.
சிவனுக்கு உரிய விசேஷமான பிரதோஷம், சிவராத்திரி போன்ற புண்ணிய காலத்தில் பூஜிக்கப்படும் இந்த லிங்க தரிசனம் பெற முக்தி கிட்டும் எனப்படுகிறது .

மனிதர்களால் ஆலயங்களில் நிர்மாணிக்கப்பட்டதை மானிட லிங்கம் எனவும் முனிவர்களால் பிரதிஷ்டை ஆனதை ஆரிட லிங்கம் எனவும், விநாயகர் மற்றும் முருகன் தவிர பிற தெய்வங்கள் உருவாக்கியதை தெய்வீக லிங்கம் எனவும், பிள்ளையார் மற்றும் முருகனால் படைக்கப்பட்டதை காணலிங்கம் எனவும், தானே உருவானதை சுயம்புலிங்கம் எனவும் குறிப்பிடப்படுகிறது.



## சிவனின் ஐவகைத்தோற்றம்

பரமேசுவரன் பல திருக்கோயில்களில் ஐவகைநிலை கொண்டு எழுந்தருளி தரிசனம் தருவார்.

சாந்தமூர்த்தி திருக்கோலத்தில் இருக்க அவர் தட்சிணாமூர்த்தியாகவும், ஆனந்த மூர்த்தியாக அமைய அவர் நடராஜராகவும், உக்கிர மூர்த்தி வடிவில் இருக்கையில் பைரவராகவும்,கருணா மூர்த்தியாக காட்சி தருகையில் அவர் சோமாஸ்கந்தராகவும் அழைக்கப்பட்டு வழிபாடு ஆகிறார்.

## தூளி தரிசனம்

ஸ்ரீசைலம் திருத்தலத்தில் எழுந்தருளியுள்ள ஸ்ரீமல்லிகார்ஜுனசுவாமி, 12 ஜோதிர் லிங்க வகைகளில் நடுவராக திகழ்கிறார். இத்தலத்தில் உடனுறைபவள் அம்பிகை ஸ்ரீ பிரமராம்பாள் 51 சக்தி பீடங்களில் இத்தலமும் அடக்கம்.

இந்த புண்ணிய பூமியில் தான் சிவன், நந்தியை தன் வாகனமாக ஆக்கி அருளினார். சிவனின் திருப்பாதங்களை ஸ்ரீசைல மலைப்பாறையில் தரிசிக்கலாம்.தவிர இறைவன் தனது திரிசூலத்தையும் ஊன்றியுள்ள சிறப்பும் உள்ளது.

இவ்வாலய கூடுதல் சிறப்பே தூளி தரிசனமென்பது.

பொதுவாக பிற ஆலயங்களுக்கு சென்று இறை தரிசனம் பெறும் முன்பாக கைகால்களை சுத்தம் செய்த பிறகே பெற வேண்டும்.ஆனால் ஸ்ரீசைல சிவாலய தெய்வ தரிசனம் பெற இந்த ஆசார முறை தேவையில்லை.எனவே, எவ்வித ஆசார சுத்தம் மேற்கொள்ளாமல் சிவதரிசனம் காணும் இம்முறை கொண்ட பெயரே 'தூளி தரிசனம்' எனப்படுகிறது.

## பயனற்ற மனித உடம்பு

கயிலைநாதன் குடிகொண்ட கோயிலை வலம் வந்து, மலர்களை நம் கையால் அந்த தெய்வத்திருமேனி மீது தூவி,அவரை வணங்காத உடம்பால் நமக்கு எவ்வித பயனும் கிட்டாது என சேக்கிழார் பெரியபுராணத்தில் இடம்பெறும் கீழ்கண்ட பாடல் இடம்பெற்ற 'செல் கதிக்கு வழிகாட்டும் பதிகத்தில்' குறிப்பிடுகிறார்.

"ஆக்கையால் பயன் என் அரன்கோயில் வலம் வந்து பூக்கையால் அட்டிப்போற்றி என்னாத இவ் வாழ்க்கையால் பயன் என்?"

இப்பதிகம் இடம்பெற்ற பகுதி பாடல்கள் அனைத்துமே அங்கமாலை என சிறப்பித்துக் கூறப் பட, இவைகளை பாடி அருளியவர் அப்பர் பிரான் எனப்படும் மகான் திருநாவுக்கரசு சுவாமிகள் ஆவார்.

## சூலத்தில் சிவதரிசனம்

அருள்மிகு அகிலாண்டேஸ்வரி உடனுறை ஆட் கொண்டேஸ்வரர் குடிகொண்ட திருக்கோயில் சேலம் மாவட்டத்தில் பெத்தநாயக்கன் பாளைய ஊரில் அமைந்துள்ளது.

இவ்வாலய சிறப்பாக இறைவன் அர்த்தநாரீஸ்வரராக, சக்தியின் சூலாயுததில் உற்சவ மூர்த்தியாக இருந்து அருள்புரிகிறார்.

இங்கு கருவறை லிங்கத்தின் கீழ் உள்ள ஆவுடையார் வித்தியாசமாக தாமரை மலர் அமைப்பில் காணப்படும்.

## ஈஸ்வரனின் உடல் அவயங்கள் கொண்ட தலங்கள்

சிவபெருமானின் உடல் பாகங்கள் ஐந்து எனப்பட, அவை உள்ள தனித்தனி தல ஆலயங்கள் இவைகள்-

ஈசனின் உடல் → கேதார்நாத்

ஈசனின் புஜம் → துங்கநாத்

ஈசனின் முகம் → ருத்ரநாத்

ஈசனின் தொப்புள் → மத் மஹேஸ்வர்

ஈசனின் தலைமுடி → கபிலேஷ்வர்

இவைகள் யாவும் வடக்கே உள்ள தலங்களாகும்.

## ஓம் நமச்சிவாய தாள் வாழ்க

சிவாய நம, நமச்சிவாய நம என இரண்டு விதமாக சிவ நாமம் ஜெபிக்க படுகிறது. இது சிவபிரானுக்கு உரிய சிறப்பான ஐந்தெழுத்து மந்திரமாகும்.

ஐந்து எழுத்துக்களும் ஐந்து புனித விஷயங்களை பற்றியது "சி" இது சிவபிரானையும், "வா"என்பது அம்பிகையையும், "ய"என்பது உயிர்களையும், "நம" என்பது மும்மலங்களையும் குறிக்கும்.

நமச்சிவாய என பக்தியுடன் அடிக்கடி ஜெபித்து வந்தால், இப்பிறவியில் நமக்கு வேண்டிய அத்தனை நற்பேறுகள் கிட்டுவதோடு பிறவிப்பிணிகள் அழிந்து முக்தி இன்பமும் கிடைக்கும்.

## சிவ பூஜைக்கு உகந்த மலர்கள்

ஈஸ்வரனுக்கு பூஜை செய்ய மிக விருப்பமான,அவருக்கு விருப்பமான புன்னை, வெள்ளெருக்கு,செண்பகம், நந்தியாவட்டை,நீலோற்பலம், பாதிரிப்பூ, அலரி, செந்தாமரை ஆகிய எட்டு வகை மலர்களை பயன்படுத்தலாம்.



## சிவனுக்குரிய அந்தாதி

அம்மையாகிய பார்வதிதேவிக்கு புகழ்மிக்க 'அபிராமி அந்தாதி'
உள்ளது போல அப்பனாகிய பரமேசுரனுக்கும் அந்தாதி பாடல்கள் உள்ளன.

கபி தேவ நாயனரால் பாடப்பெற்று பதினோராம் திருமறையில்
இடம்பெற்ற "சிவ அந்தாதி" யும்,காரைக்கால் அம்மையார் சிவனைப் போற்றி
பாடிய அற்புத திருவந்தாதியும், ஆகிய இவை சிவதுதிக்குரியதாக அமைந்தவை.

## சிவ தாண்டவம்

ஆட்டத்தில் நாட்டம் உள்ளதால் ஈசுவரனை நடராஜர் என்றும் போற்றுவர். அவர் ஆடும் நடனத்தை 'தாண்டவம்' என்பார்கள். தண்டு என்ற மகரிஷிக்கு சிவனே குருவாகயிருந்து நடனக்கலையை போதித்தார். அப்பொழுது தண்டு முனிவருக்கென தனியே அவர் ஆடிய நடனம் என்பதால் அந்நடனம் 'தாண்டவம்' என்ற பெயர கொண்டுவிட்டது. நடராஜ பெருமானுக்கு மார்கழி மாதத்தில் வரும் ஆருத்ரா புண்ணிய நாளில் காண்பிக்கப்படும் தீபாராதனைக்கு 'தாண்டவதீபாராதனை' என்றே பெயர்.

## சிவாலய ஓட்டக் கோயில்கள்

திருமலை ஜமுஞ்சிறைஸ, திக்குரிசி, திற்பரப்பு, திருநந்திக்கரை, பொன்மனை,பன்னிப்பாகம் எனும் பந்தி பாகம்,கல்குளம்,மேலாங்கோடு,

திருவிடைக்கோடு, திருவிதாங்கோடு,திருப்பன்னிகோடு, திருநட்டாலம் ஆகிய தல சிவாலயங்களை “சிவாலய ஓட்ட கோயில்கள்” என குறிக்கப்பட்டுள்ளது.

## சிவனுக்கு வித்தியாச நெய்வேத்தியம்

வேறெங்கும் இல்லாத நைவேத்திய வழிபாடு சிதம்பரம் நடராஜர் கோயிலில் நடைபெறுகிறது.

வேகவைத்த கத்திரிக்காயை இடித்து அத்துடன் உப்பு, புளி,சேர்த்து சுண்ட கொதிக்க விட்டு,பசை பக்குவத்தில், கார மல்லிப்பொடி சேர்த்து நல்லெண்ணெயில் கடுகு தாளித்து சூட்டோடு இறக்கி விடும் கூட்டு சிவனுக்கு தினமும் இரண்டு கால பூஜையில் சம்பா சாதத்துடன் நெய்வேத்தியமாகிறது.இதன் பெயர் ‘கொத்சு’ நெய்வேத்தியம் என்பது.

## திருச்சிற்றம்பல பின்னனி

சிவபக்தர்கள், தேவாரம் ஓதத் தொடங்கும் முன்பாக “திருச்சிற்றம்பலம்” என்று உரக்கச் சொல்லி ஆரம்பிப்பது வழக்கம்.

இதன் காரணம், சிதம்பரம் தலம் தான் சைவத் திரு முறைகளை பாதுகாத்து உபசரித்தது.அது இசை உலகிற்கே பிறப்பிடமாகும்.எனவே, திருமுறை ஓதுபவர்கள்,தேவாரம் ஓதுவதற்கு முன்பு மட்டுமின்றி, அதன் முடிவிலும் திருச்சிற்றம்பலம் என்று முழக்கமிடுவார்கள்.

செபரோறு என்ற தலம் ஆந்திர மாநிலத்தை சேர்ந்த குண்டூரிலிருந்து சுமார் 15 கி.மீ. தூரத்தில் அமைந்துள்ளது.இத்தல சிவாலயத்தில் குடிகொண்டுள்ள ஈசுவரன் பிரம்ம லிங்கேசுவரராக,நாமம் பூண்ட திருமுகத்துடன் அபூர்வ தோற்றமளிக்கிறார்.அவர் எதிரே ஒரே கல்லில் உருவான மிகப்பெரிய நந்தி காட்சி தருவார். இவ்வாலய மற்றொரு சிறப்பு கருவறை சுற்றில் ஜன்னல்கள் அமைக்கப்பட்டுள்ளதால், பக்தர்கள் சிவனின் நான்கு திருமுக தரிசனமும் காணமுடியும்.

## ஈசுவரனின் குணவகை

பரமேசுவரனின் திரு வடிவங்களை ஐந்து குணங்களின் அடிப்படையில், ஐந்து வகையாக கூறப்படுகிறது. இப்படி --தட்சிணாமூர்த்தியை --சாந்தமூர்த்தியாயும்,நடராஜரை ஆனந்த மூர்த்தியாகவும்,பைரவரை உக்கிர மூர்த்தியாகவும், பிட்சாடனரை வசீகர மூர்த்தியாகவும்,சோமாஸ்கந்தரை கருணா மூர்த்தியாகவும் இலக்கணமிடப்படுகிறது.



## மகா சிவராத்திரி வழிபாடு

கிருதா யுகத்தில் வைகாசி மாதத்திலும், திரேதாயுகத்தில் கார்த்திகை மாதத்திலும்,துவாபர யுகத்தில் புரட்டாசி மாதத்திலும், நிகழும் கலியுகத்தில் மாசி மாதத்திலும், மகா சிவராத்திரி யுகம் தோறும் மாறுபட்டு வழிபாடு அமைந்துள்ளது.

## மச்சேஸ்வரர் யார்?

காஞ்சிபுரத்தில் மகாவிஷ்ணு மீன் வடிவில் மாறி,இங்குள்ள சிவனை ஒரு காலத்தில் பூஜித்ததால் அந்த ஈஸ்வரன் ‘மச்சேஸ்வரர்’ என்ற திருநாமம்கொண்டு, ஆலயத்தில் எழுந்தருளியுள்ளார்.

## சிவாலயமும்,சொர்க்க வாசலும்

பெரும்பாலும் வைணவ திருக்கோயில்களில் தான் மார்கழி மாதத்தில் இடம்பெறும் ஸ்ரீ வைகுண்ட ஏகாதேசி நாளில் ‘சொர்க்கவாசல் திருவிழா’ நடைபெறும் ஆனால் சிவாலயமான திருவண்ணாமலை அண்ணாமலையார் ஆலயத்தில் கூட சிறப்பாக

‘சொர்க்கவாசல் திறப்பு விழா’ இன்றும் நடைபெற்று வருகிறது.

## சிவ வழிபாடு

“சிவ வழிபாட்டுக்கு இன்று பேதமில்லை வடக்கே காசி, கேதார்நாத் போன்ற எத்தனை எத்தனையோ சிவ க்ஷேத்திரங்கள் உள்ளன இருந்தாலும் சிவ வழிபாடு என்பது வடநாட்டை விட தென் நாட்டிலேயே அதிகம் கோலோச்சுகின்றது”என்று மேனாட்டு அறிஞர் வெர்கஸன் என்பவரின் ஆராய்ச்சி தெரிவிக்கிறது.



## பஞ்சமுக சிவலிங்கம்

பஞ்சமுக சிவலிங்க வடிவில் ஈசுவரனின் முகம் இப்படி வெவ்வேறு திசை நோக்கி அமைந்திருக்கும். ஒவ்வொரு முகத்திலிருந்தும் கங்கை நதி உற்பத்தியாவதாக ஐதீகம்.

கிழக்கு முகத்திலிருந்து ரத்தின கங்கையும், மேற்கு முகத்திலிருந்து தேவ கங்கையும், வடக்கு முகத்திலிருந்து கயிலாய கங்கையும்,தெற்கு முகத்திலிருந்து உக்கிர கங்கையும்,நடு முகத்திலிருந்து பிரம்ம கங்கையும், உற்பத்தி ஆவதாக சிவபுராணத்தில் கூறப்பட்டுள்ளது.

## சிவ நிவேதன முறை

பரமசிவன் கொண்ட ஒவ்வொரு திருமுகத்திற்கும் நெய்வேத்திய முறை வேறுபடும் .

| | | |
|---|---|---|
| அன்ன நிவேதனம் | --- | ஈசானமுகம் |
| தயிரன்னம் | --- | தத்புருஷமுகம் |
| எள்ளன்னம் | --- | அகோரமுகம் |
| சர்க்கரை அன்னம் | --- | வாமதேவமுகம் |
| பாலன்னம் | --- | சத்யோஜாதமுகம் |

## சிவனும் வில்வதளமும்

வில்வம் ஈடு இணையற்ற மங்களப்பொருள்.சிவராத்திரி புண்ணிய தினங்களில் சிவபூஜையில் அர்ச்சனை புரிய வில்வ தளம் பயன்படுத்தப்படும். ஈசனுக்கு மிக விருப்பமான இதில் மகாலட்சுமி உறைந்து உள்ளாள்.இதனால்தான் பரமேசுரனுக்கு உகந்த திருவாதிரை நட்சத்திர தினத்தில் திருமகளுடன் இருக்கும் திருவேங்கடவனுக்கு வில்வதள அர்ச்சனை நிகழ்த்தப்பட்டு வருகிறது. செல்வவளம் தரும் வில்வ அர்ச்சனை.

## சிவ விரதங்கள்

கயிலை நாதனுக்கு உரிய எட்டு விரதங்களை அறியலாம்.

| | | |
|---|---|---|
| சோமவார விரதம் | --- | திங்கட்கிழமை தோறும் |
| திருவாதிரை விரதம் | --- | மார்கழி மாத திருவாதிரை தினம் |
| மகா சிவராத்திரி விரதம் | --- | மாசி மாத தேய்பிறை சதுர்த்தி |
| உமா மகேஸ்வர விரதம் | --- | கார்த்திகை மாத பௌர்ணமி |
| கல்யாண விரதம் | --- | பங்குனி மாத உத்திரம் |
| பாசுபத விரதம் | --- | தைமாத பூசம் |
| அஷ்டமி விரதம் | --- | வைகாசி மாத பூர்வபட்ச அஷ்டமி |
| கேதார விரதம் | --- | ஐப்பசி மாத தீபாவளி அமாவாசை |

# உலக இன்பங்களைப் பெற

~ ரா. பன்னீர்செல்வம்



இனிய வாசகர்களே! உங்கள் அனைவருக்கும் வாழ வேண்டும் என்கிற ஆசையைவிட இன்பங்கள் எல்லாவற்றையும் பெற்று வாழ வேண்டும் என்பதே அதிக பட்ச ஆசையாக இருக்கும். அப்படி எல்லா வகையான இன்பங்களை அனைவரும் பெற்று வாழவேண்டும் என்னும் இனிய நோக்கத்தோடு சௌந்தர்ய லஹரியில் ஆதிசங்கரர் அருளிய ஒரு ஸ்லோகம் மந்திரமாக மாறி மகிமைகள் செய்கின்றது. அந்தப் பாடல்...


“பவாநி த்வம் தாஸே மயி விதர த்ருஷ்டிம் ஸகருணாம்
இதி ஸ்தோதும் வாஞ்சந் கதயதி பவாநி த்வமிதி ய:
ததைவ த்வம் தஸ்மை திஸஸி நிஜ-ஸாயுஜ்ய-பதவீம்
முகுந்த-ப்ரஹ்மேந்த்ர-ஸ்புட-மகுட-நீராஜித-பதாம்”

### பாடலின் பொருள்:

தாயே! பரமனின் பத்தினியே! எந்த ஒரு மனிதன்
உன்னைச் சரணடைந்து எனக்கு கருணை காட்டு என்று உருகி,
‘பவானி, நீ’ என்னும் இரண்டு வார்த்தைகளை சொல்லி துதிக்கிறானோ
அப்போதே நீ....மும்மூர்த்திகளால் வணங்கப்பட்ட உன் திருவடியை வைத்து அவனை ஆட்கொண்டு அருள்கின்றாயே! உன் கருணையே கருணை என்பதே இந்த மந்திர பாடலின் பொருள்.

### இந்த மந்திரத்தை பிரயோகிக்கும் முறை

உலக இன்பங்களை கொடுக்கக்கூடிய இந்த மந்திரத்திற்கான யந்திரத்தை தங்கத் தகட்டிலே வரைந்துவைத்தே பூஜைக்குப் பயன்படுத்த வேண்டும்.30 நாட்கள் வடக்கு நோக்கி அமர்ந்து தினமும் 1001 முறை மந்திரத்தை ஜபிக்க வேண்டும்.
செந்தாமரை இதழ்களைக்கொண்டு, லலிதா சகஸ்ரநாம அர்ச்சனை செய்வது சிறப்பு.
அன்னம், பழம், பால் பாயாசம், உளுந்து வடை இவற்றுடன் கர்ப்பூர வீடிகா என்னும் தாம்பூலமும் வைத்து நைவேத்யம் செய்ய வேண்டும்.
மேற்கண்ட முறையில் நியமங்களை செய்து பூஜைகள் நடத்தி, மந்திர ஜபம் செய்வதன் மூலம் செல்வங்களைப் பெறுவதோடு,கடன் தொல்லைகளிலிருந்து விடுபட்டு, உலக இன்பங்களைப் பெற்று சிறப்புடன் வாழலாம்.



# காரடையான் நோன்பு விரதமுறை

~ ஆர். பரஞ்சோதி



சுமங்கலிப் பெண்களால், தங்கள் கணவரின் ஆயுள்பலம் பெருகுவதற்காக செய்யப்படுகின்ற இந்த சாவித்திரி விரதம் எனப்படும் காரடையான் நோன்பினை எவ்வாறு கடைப்பிடிக்க வேண்டும் என விதிமுறைகள் உள்ளது.

இந்த விரதத்திற்கு காரடையான் என்னும் பெயர் எப்படி வந்ததென்றால், கார் அரிசியும் காராமணியும் கலந்து அடை செய்து படையல் போடுவதால் இந்தப் பெயர் வந்தது என தெரிகிறது.

அதிகாலை எழுந்து நீராடி, பூஜையறையை சுத்தம் செய்து, பூஜையில் கலசம் வைத்து, அதன் மேல் தேங்காயும் மாவிலையும் வைத்து, கலசத்தில் மஞ்சள், குங்குமம், சந்தனப்பொட்டு வைத்து அதன் மேல் மஞ்சள் கயிறினை கட்ட வேண்டும்.

இதனருகில் இஷ்டதெய்வ அம்பாள் படத்தினை வைத்து, அம்பாளை காமாட்சி அல்லது சாவித்திரியாக நினைத்து வழிபட வேண்டும்.

கார் அரிசி, காராமணி கொண்டு செய்யப்பட்ட அடையையும் உருகாத வெண்ணையும் வைத்து அம்பாளுக்கு படையல் போட வேண்டும்.

நோன்பு சரடில் மலரைக் கட்டி பூஜையில் வைத்து, அதனை எடுத்து கழுத்தில் கட்டிக் கொள்ள வேண்டும்.

“மாசிக் கயிறு பாசி படியும்” என்னும் பழமொழி இந்த கயிற்றுக்குரிய கணவன் பலகாலம் வாழ்வான் என்கிற மகத்துவத்தை விளக்குவதாய் உள்ளது.

இந்த காரடையான் நோன்பினை கடைப்பிடிக்கும் பெண்கள் தீர்க்க சுமங்கலியாக நீடூழி வாழ்வார்கள் என்பது ஐதீகம்!

# எது பக்தி ?.....



~ ரா. பன்னீர் செல்வம்

சன்னதி தெரு வழக்கம்போல பரபரப்புடன் காணப்பட்டது. இது பக்தி பரபரப்பு! வெள்ளிக்கிழமை என்பது மட்டுமல்ல; இந்த வைதீஸ்வரன் என்னும் வைத்தியநாதசுவாமி ஆலயத்தில் குடமுழுக்கு நடைபெற்று முடிந்து, மண்டல பூஜையின் நிறைவு நாள் என்பதால் சிறப்பு பூஜைகள், அலங்காரங்கள் நடைபெறும் என்பதால் வழக்கத்தைவிட பக்தர்கள் கூட்டம் அதிகமாகவே இருந்தது!

பெரிய கடைகள் மட்டுமின்றி, தேங்காய், பழம், பூ விற்கும் சிறியகடைகளும் கூட்டம் அலை மோதி நின்றது.

கோவிலின் கோபுர வாசல்!...இருபது, முப்பது யாசகம் பெறுவோர்.... (பிச்சைக்காரர்களை அழைக்கலாமே). கோபுரங்களின் இருபுறமும் வரிசையாய் அமர்ந்து திருவோடு, அலுமினியத் தட்டு என அவற்றில் இருந்த சில்லறைகளை
தட்டி தட்டி சப்தமெழுப்பி, “அய்யா...சாமி.... தர்மதுர.....ஏதாவது போடுங்க....” என்று குரலெழுப்பியபடி இருந்தார்கள்.

அவர்களுக்கு சற்று அருகே..... இந்த ஆரவாரம் எதையுமே காதில் வாங்காமல் எழுபது வயதைத் தாண்டிய ஒரு முதியவர், நரைத்த தலைமுடி, தாடி இடையில் கட்டிய ஒரு காவி வேட்டி என உடம்பில் சட்டை இல்லாமல் கைகளை தலைக்கு வைத்தபடி படுத்துக் கொண்டிருந்தார்.

யாரிடமும் கையேந்த மாட்டார்; எவராவது அவரை அணுகி வந்து காசு, பணம் கொடுத்தால்அதனை தொடக்கூட மாட்டார்!
“அதோ..... சோறு திங்கிற தட்டுல காசு நிறைஞ்சா போதும்னு கூப்பாடு போட்றாங்களே...அவங்களுக்கு உங்க காசு, பணத்த போடுங்க,” என்று சொல்லி விடுவார்.
அவர் இந்த ஆலய வாசலுக்கு வந்து சேர்ந்த பன்னிரண்டு ஆண்டுகளில் யாரிடமும் எதையும் யாசகம் கேட்டுப் பெற்றதில்ல; கோவிலுக்கு வந்து போகின்ற அனைவரையும் உற்று நோக்குவார்;வானத்தைப் பார்ப்பார்; தனக்குத் தானே சிரித்தபடி பேசிக் கொள்வார். பின் எப்படி உயிர் வாழ்கிறார் என்ற கேள்வி எழும்!

யாராவது, தேங்காய், பழம், பொங்கல் என கொண்டு வந்து கொடுப்பார்கள். கொடுப்பவர் முகத்தை உற்றுப் பார்த்து, அதன்பிறகே வாங்கி உண்பார்.அவற்றை வாங்கி உண்பதற்கு என்ன அளவுகோல் வைத்திருக்கிறார் என்பது யாருக்கும் தெரியாது!

சிலரிடம் எந்த ஒரு பொருளையும் வாங்காமல் முகத்தை திருப்பிக் கொள்வதும் உண்டு!

வழக்கமாக இந்தக் கோவிலுக்கு வருகின்ற ஒரு சில பக்தர்கள் இவரை வணங்கி, பேசிக்கொண்டிருப்பார்கள். அப்படி தேர்ந்தெடுத்த ஒரு சிலரிடம் மட்டும் அன்புடன் பேசி, தனது மனதில் பட்ட விஷயங்களை சூட்சுமமாக சொல்வார்.

இவரை, பெரிய மகான், சித்தர் என்றெல்லாம் எண்ணி, காலில் விழ வருவார்கள் அவர்கள்! ஆனால், காலில் விழவரும் அவர்களைத்தடுத்து, தோளில் கைபோட்டு அருகே அமர வைத்து பேசிக்கொண்டிருப்பார். “நானும் உங்களைப் போல ஒரு சாதாரண மனிதன் தான். காலில் விழ நான் என்ன சாமியா? கடவுளைப்போய் வணங்குங்க! நானே வாழத்தெரியாமல் -வாழ்க்கையை இழந்து இங்கே வாடுகிறேன். வாடிய செடியில் வண்ணமலர் பூக்காது”, என சிரித்தபடி சொல்வார். கோவிலை கூட்டிப் பெருக்கி சுத்தம் செய்கின்ற பணியை அர்ப்பணிப்புடன் செய்துவரும் மாரிமுத்து என்பவன் மட்டுமே இவருடன் உரிமையாக பேசுவான்; பழகுவான்! மாரிமுத்து ஆதரவற்றவன்; முப்பது வயதை நெருங்கினாலும் விபரம் தெரிந்த நாள்முதலாய் இந்த கோவிலே கதி என்று இருக்கும் வெள்ளை மனசுக்காரன். அவனைப் பார்த்தாலே, பெரியவருக்கு புன்னகை மலர்ந்துவிடும்!

மாரிமுத்துவோ பெரியவரிடம் வந்தால் குதூகலத்துடன் ஒரு குழந்தையாய் மாறிவிடுவான்.

கோவிலின் உள்ளிருந்து மாரிமுத்து துள்ளிக் குதித்தபடி ஓடிவந்தான்; அவனது இடுப்பு வேட்டி, எப்போது அவிழ்ந்து விடுமோ என்னும் நிலையில் இருந்தது. மேல் துண்டை கையில் ஏந்தி,அதில் எதையோ சுருட்டிப் பிடித்தபடி ஓடி வந்தான்.

வந்தவன் நேரே பெரியவரிடம் வந்தான்... "சாமி.. சாமி இந்தாங்க! உங்களுக்குன்னு சர்க்கரை பொங்கலு,பழம் எல்லாம் கொண்டு வந்திருக்கேன்! சாப்பிடுங்க...." என்று துண்டில் இருந்த பழங்களையும் தொன்னையில் இருந்த பொங்கலையும் கொடுத்தான்

சிரித்தபடி எழுந்த பெரியவர், "ஆண்டவன்... உன் மூலமா எனக்கும் படியளக்கிறான்! "என்று சொல்லியபடியே பொங்கலை சாப்பிடத் தொடங்கினார். சாப்பிட்டுக்கொண்டே, "அப்பா, மாரிமுத்து....என்னை நீ சாமின்னு கூப்பிடாதே! உனக்கு எத்தன முறை சொல்லி இருக்கேன்... இப்படி பார்க்கிறவர்களையெல்லாம் சாமின்னு சொன்னா.... அப்புறம் சாமிக்கு என்னப்பா மரியாத ? "....என்றார்!

"எனக்கு நல்லவங்க எல்லாருமே சாமிதான்"..... என்றான் மாரிமுத்து! பெரியவர் சிரித்தார்.

"என்ன சிரிக்கிறீங்க?... சாமிக்கு படைச்சத சாமியா சாப்பிடுது; இப்ப நீங்க தானே சாப்பிடறிங்க! "கபடமமில்லாமல் சிரித்தான் மாரிமுத்து!

"சாமி சாப்பிடறதா இருந்தா.... யாரும் படைக்க மாட்டாங்க;படையல் சாமிக்கு; பசி மனிதனுக்கு; படையல சாப்பிடறவங்க எல்லாரும் சாமி இல்ல," என்று பெரியவர், பழத்தை சாப்பிட்டார்.

"அப்புறம் சாமி.. நம்ம பந்தல்கார பழனி உங்கள பார்க்க வரணும்னு சொன்னாரு! அதுக்குள்ள அந்த தர்மகர்த்தா வந்துட்டாரு. அவரண்ட பேசிகிட்டு இருக்கறாரு இப்ப வந்திடுவாரு அத சொல்லத்தான் நான் வந்தேன்," என்றான் மாரிமுத்து!

"சரி... இந்தா நீயும் ரெண்டு பழத்த சாப்பிடு!" என பழங்களை நீட்ட, " வேணாம் சாமி, இன்னும் கொஞ்ச நேரத்துல அன்னதானம் நடக்கப்போகுது! பக்தர்கள் சாப்பிட்டு முடிச்சதும் மிச்சம், மீதி இருக்கிறத சாப்பிட்டுட்டு சுத்தம் பண்ணனும்; பழத்த நீங்களே சாப்பிடுங்க," என அவரை யோசனையுடன் பார்த்தவன், "ஏஞ்சாமி....நீங்க ஏன் கோயில்ல அன்னதானம் சாப்பிடறதே இல்ல!?" என ஆச்சர்யத்துடன் கேட்டான்.


"ரொம்ப தூரத்துல இருந்து கடவுள தரிசனம் பண்ண வர்ற பக்தர்களுக்கு தான் தினமும் அன்னதானம்! என்ன மாதிரி பரதேசிங்களுக்கு இல்ல! இப்ப நீ கொடுத்தியே இது போதும் எனக்கு,"என்றார் பெரியவர்.

"என்னமோ சாமி.... நீங்க எப்ப பேசினாலும் எனக்கு பாதி புரியும்; மீதி புரியறதே இல்ல;சரி நான் போகட்டுமா? அப்புறமா வரேன்," என்றான்

."அந்த பந்தல் காரர் எங்கப்பா?"...

"இதோ இப்போ வந்துடுவாரு, நான் போய் வரேன் சாமி!"....

என்றபடி கோயில் உள்ளே சென்றான் மாரிமுத்து! உள்ளே போன வேகத்தில் வெளியே ஓடி வந்தான் மாரிமுத்து!



சாமி...அந்த தர்மகர்த்தா சிகரெட் வாங்கிட்டு என்ன இங்கேயே நிக்க சொன்னார்!" என்றான்.

"ஏன்.... இங்கேயே நிக்கணும்" பெரியவர்.

"பின்ன... உள்ளே சிகரெட் பிடிக்க கூடாது இல்ல, அதான் நான் சிகரெட் வாங்கி வச்சு, இங்கே நின்னா.... அவர் இங்கே வந்து கொளுத்துவாரு!".... மாரிமுத்து.

“கொளுத்தட்டும் கொளுத்தட்டும்... உள்ளே வேணாம்னு வெளியில வந்து கொளுத்தினா சாமிக்கு தெரியாதா?”...என்றபடி ஒரு சிரிப்பு சிரித்தார், பெரியவர்.

மாரிமுத்து அருகில் உள்ள கடையில் சிகரெட் வாங்கிக் கொண்டிருக்க, உள்ளிருந்து மெல்ல நடந்து வந்தார், தர்மகர்த்தா! உடலை மூடிய பட்டாடை! அங்க வஸ்திரத்தின் ஒரு முனையை எடுத்து வலது கை விரலில் இருந்த வைர மோதிரத்தை துடைத்தபடி, பெரியவர் இருக்கும் இடத்திற்கு சற்று தள்ளி நின்றார்!

அவரைப் பார்த்த அந்த இடமே அமைதியானது, சைக்கிள் டோக்கன் போடும் காண்ட்ராக்டர் அவரைப் பார்த்ததும் பணிவுடன் ஓடிவந்து நின்றார்.

அவனைப் பார்த்த தர்மகத்தா, “என்னடா, செந்தில் வருமானம் எல்லாம் பரவாயில்லையா?” என்றார்.
“ஏதோ உங்க புண்ணியத்துல நல்லபடியா போயிட்டுருக்குங்க அண்ணே!,” பணிவு மாறாமல் சொன்னான், அவன்!
“சரி... நான் எதுக்கு இன்னைக்கு பளபளக்கிற பட்டுத்துணியோட கோவிலுக்கு வந்திருக்கிறேன்னு தெரியுமா?...” தர்மகர்த்தா கேட்க,
‘அட, ஆமா.... என்னங்கண்ணே விசேஷம்!?”
செந்தில் கேட்டான்.
“அது இந்த வருஷம் தொழில்ல நல்ல லாபம்.... அதான்... சாமிக்கு வைரப்பட்டையும் அம்மனுக்கு முத்தங்கியும் கொண்டுவந்து சார்த்தினேன் பெருமிதத்துடன் சொன்னார்.

ஆச்சரியமான செந்தில், அப்படிங்களா?... சாமிக்கு இவ்வளவு பண்றீங்கன்னா.... லாபம், கோடிக்கணக்கில இருக்குமேண்ணே!”....என்றான்.
பெரியவர் இதையெல்லாம் கேட்டபடி தனக்குள் சிரித்துக் கொண்டார். இதற்குள் சிகரெட் வாங்கி வந்த மாரிமுத்து தர்மகத்தாவிடம் கொடுக்க, “சரி... போடா! அன்னதான கூடத்துக்கு போ!” என்றதும் மாரிமுத்து கோவிலின் உள்ளே ஓடினான்.

“இந்த ஊர்ல என்னவிட்டா, இத்தனை லட்சம் சாமிக்கு செலவு பண்ற தகுதி யாருக்கு இருக்குது?”.... என சிரித்தபடியே புகையை மேல் நோக்கி விட்டார்.
“இதுல என்னண்ணே சந்தேகம்?” நீங்க மட்டும் இல்லேன்னா... நம்ம கோவில் இப்படி சீரும் சிறப்புமா இருக்க முடியுமா?”.... செந்தில் ஒத்து ஊதினான்.
“ஏதோ என் சக்திக்கு முடிஞ்சத சாமிக்கு செய்துகிட்டு இருக்கேன்... இவ்வளவு செல்வம், செல்வாக்கு எல்லாம் இருந்தும் நானே இந்த கோவிலையும் சாமியையும் கவனிக்காம விட்டா, வேற யார் கவனிப்பாங்க?! இந்த சாமியோட கதிதான் என்ன ஆகறது?”... என்றபடி, சிகரெட்டை கீழே போட்டு மிதித்தவர், கோயிலின் உள்ளே செல்ல,
செந்தில் அங்கிருந்து நகர்ந்தான்.

தர்மகத்தா பேசியதை கேட்டுக்கொண்டிருந்த பெரியவரின் முகத்தில் ஏளனச் சிரிப்பு மட்டுமே வெளிப்பட்டது!
“என்னை விட்டா... சாமிய வேற யார் கவனிப்பாங்க?!...அசுரர்களிடம் வெளிப்பட்ட அதே ஆணவம்! சாமிய நீ கவனிக்க போறியா?...
மூடனே, சாமி தான் உன்ன கவனிச்சுக்கிட்டிருக்குது நீ உடுத்தியிருக்கிற பட்டாடையில எத்தன பட்டுப்பூச்சிங்க உயிர விட்டிருக்குது தெரியுமா?... உயிரை காக்கிற ஆண்டவன, உயிர்க்கொலையில ஆடை உடுத்தற நீ கவனிக்க போறியா?... சரி,தான்”.... என வாய்விட்டு பேசி சிரித்தார் .

கோவிலின் உள்ளே இருந்து பந்தல்காரர் பழனி, கையில் ஏதோ ஒரு பார்சலுடன் பெரியவரை நோக்கி வந்தார்.

கையெடுத்துக் கும்பிட்டவர், அய்யா.. சாமி தரிசனம் பண்ணிட்டு அப்புறமா உங்கள வந்து பார்க்கலாம்னு தான் உள்ளே போயிட்டேன்! இந்தாங்கய்யா”..என இரண்டு பார்சல்களைக் கொடுத்தார்.

“என்ன பழனி இது?... என்றபடி கையில் வாங்கினார் பெரியவர்.
“நீங்க தான் என் வீட்டுக்குக் கூப்பிட்டாலும் வர மாட்றிங்களே! அதான் வீட்ல சாப்பாடு செஞ்சு; பார்சல் பண்ணி கொண்டு வந்தேன். இன்னொன்னு... உங்களுக்கு தேவையான ரெண்டு காவி வேட்டி”... என்றான் பழனி.
“எதுக்குப்பா, இதெல்லாம்?!”... என தயங்கினார் பெரியவர்.



...ந்து
வரு...



வேலை பார்த்துகிட்டிருந்தவன் நான். அந்த கடக்காரர் இறந்ததும் அவருடைய பையன் போக்கு பிடிக்காம, இதே கோயில் வாசல்ல, என்ன பண்றதுன்னு தெரியாம நின்னேன். நீங்க தானே அய்யா, நேர்மையான முறையில தொழில் நடத்தினா நீயும் ஒரு மொதலாளியா உயர கடவுள் துணையிருப்பான்னு சொன்னிங்க; அந்த வார்த்த தானேய்யா என்னை இந்த அளவுக்கு வளர்த்து விட்டுச்சி! அதனால் தானே, கும்பாபிஷேகத்துக்கு பந்தல் போட்டு, சாரங்கட்டி கான்ட்டிராக்ட் எடுக்கிற அளவுக்கு இருக்கேன். அய்யா, கோவில் காரியம்..
அதனால பெருசா லாபம் ஏதும் வைக்கல! ஒரு 25 ஆயிரம் லாபம் கிடைச்சது! அதலயே ஒரு பத்தாயிரத்த உண்டியல்ல காணிக்கையாப்போட்டுட்டேன்! இன்னைக்கு அன்னதான செலவ ஏத்துகிட்டேன். எனக்கு கூலியா ஒரு ஐயாயிரம் போதும்னு எடுத்துக்கிட்டேன் அய்யா! அதுல தான் என் மனசார உங்களுக்கு இந்த வேட்டிகள வாங்கி வந்தேன்.. தயவுசெஞ்சு மறுக்காதீங்க அய்யா!"... என வேண்டினான்.

சற்றே யோசித்த பெரியவர், "கிடைச்சவரைக்கும் லாபம் என்று நினைக்காம, உன் உழைப்புக்குத் தேவையான பணமே போதும்னு எடுத்துகிட்டு, மிச்சப்பணத்தை கடவுள் காரியத்துக்கு செலவு பண்ணிட்ட; இந்த பரதேசிக்கும் தேவை இருக்குன்னு வேட்டிய கொண்டு வந்து கொடுத்திருக்றே! உன்னை வளர்த்துவிட்ட சாமிக்கு என்ன முடியுமோ அத பண்ணிட்ட; இதுதாம்பா பக்தி! படாடோபமா.. சாமிக்கு.. அது கேட்காததையெல்லாம் கொடுத்து செலவு பண்ணிட்டு, இந்த சாமி இருக்கிறதே என்னால தான்னு தன்னைப் புகழ்ந்துக்கறது பக்தி இல்லை! எது பக்தின்னு தெரிஞ்சுக்காமலே பலபேர் கோவிலுக்கு வர்றாங்க!"... என்றவர், தொடர்ந்தார்..!.. "ஒரு மனிதனோட பசியப் போக்கறது, இயலாதவனுக்கு கல்வி கொடுக்கிறது, இப்படி நல்லது செய்யறது மட்டுமில்ல; அடுத்தவங்களுக்கு தீங்கு செய்யாம வாழறதும் சிறந்த பத்தி தான்."

நாலணாவுக்கு கற்பூரம் வாங்கி கொளுத்தறதும் பக்தி தான். நாப்பது லட்சத்துக்கு வைரக்கிரீடம் வாங்கி சாத்தரதும் பக்திதான். அது அவங்க அவங்க சக்தியைப் பொறுத்தது! ஆனா, இதல.. நாங்கதான்.. என்னாலதான்.. அப்படிங்கற எண்ணம் வந்துடுச்சின்னா.. ஆண்டவன் தன்னோட வேலைய… இல்ல இல்ல விளையாடல நடத்திக்காட்டிடுவான்! அதுதான் திருவிளையாடல்! இன்னும் இங்க பலபேருக்கு எது பக்திங்கறதுல பெரிய குழப்பமே இருக்குது! மொதல்ல அவங்க தெளிவு பெறணும்,"என்றார்.

பந்தல் கார பழனி பெரியவரை வணங்கி விடைபெற்று, கோபுரத்தைப் பார்த்து வணங்கி விடைபெற்றார்.

# பலன் தரும் சில கிழங்கு வகைகள்

~ சு.கீதா









பூமிக்கடியில் பொதுவாக விளையும் இயல்புடையவை கிழங்கு வகைகள். அவைகளில், அன்றாட சமையலுக்கு பயன்படும் கிழங்கு வகைகள் பலவும், உடலுக்கு பாதிப்பு தரும் கிழங்குகள் சில, மருத்துவ குணம் கொண்டதாகவும் உள்ளன.

அவற்றில் மருத்துவ பயன்தரும் சில கிழங்குகள் பற்றி அறிவோம்.

## கொட்டிக்கிழங்கு

ஆங்கிலத்தில் APONOGETON NATANS என வழங்கப்படும், நமது நாட்டுக்கான

கொட்டிக்கிழங்கு பார்வைக்கு உருளைக்கிழங்கை போன்ற தோற்றத்தில் இருக்கும்.

இக்கிழங்கை சமைத்து உண்ண ருசியாக இருப்பதோடு, நம் உடலுக்கு தேவையான மாவு சத்தையும் தரும்.

நம் பழங்குடி மக்களின் அன்றாட பாரம்பரிய உணவுப் பழக்கத்தில் இருக்கும் தன்மை கொண்டது கொட்டிக்கிழங்கு.

## தண்ணீர்விட்டான் கிழங்கு

உடலுக்கு பலம் அளிப்பதோடு, மூளை, உடல் பலவீனம், பிரசவம் ஆன உடன் உண்டாகும் களைப்பு இவற்றை போக்கும் குணம் கொண்டது தண்ணீர்விட்டான் கிழங்கு.

### இதனை பயன்படுத்தும் விதம்

தண்ணீர்விட்டான் கிழங்குகளின் ஆங்கிலப்பெயர் - ASPARAGUS RACEMOSUS பசுமையானவற்றை சேகரித்துக்கொண்டு, அதன் மேல் தோலை நீக்கி, பிறகு சீவி எடுத்து சின்னசின்ன துண்டுகளாக்கி, இடித்து சாறு பிழிந்து, சம அளவு பசும்பாலுடன் சேர்த்து கலக்கி சாப்பிட்டால் மேலே சொன்ன உபாதைகள் நீங்கிவிடும்.

## காட்டு சேனைக்கிழங்கு

பூமியிலிருந்து கிழங்குகளை எடுத்து சிறு துண்டுகள் ஆக்கிவிட்டு,அத்துடன் புளியன் இலையையும் சேர்த்து நன்கு வேக வைக்க வேண்டும். இதன் காரணம் காட்டு சேனையின் இயல்பு நமநமக்கும் அரிப்பு தன்மையோடு கார பண்பையும் கொண்டுள்ளதால் மேற்கண்ட முறையில் அது நீங்கிப் போகும்.

இப்படி செய்த பின்பு, காட்டுச்சேனை துண்டுகளை வைத்து காரக்குழம்பு, ஊறுகாய், இவை தயாரித்து உண்ணலாம்.
உடலுக்கு இது சக்தி தருவதோடு சாப்பிட ருசியாகவும் இருக்கும். இதன் ஆங்கில பெயர் AMORPHOPHALLUS SYLVATICUS என்பதாகும்.

## மஞ்சள் கிழங்கு

மஞ்சள் கொண்ட ஆங்கில பெயர் CURCUMA LONGA என்பது.

பலவகைகளில் மருத்துவ குணம் கொண்ட மஞ்சளை நீர் விட்டு அரைத்து உடலில் பூசி வர உடலில் பற்றியிருந்த புலால் நாற்றம் பறந்தோடுவதுடன் தேகம் பொன்னிறம் அடையும் .தேவையற்ற முடியை போக்கும் மஞ்சள் பெண்களுக்கு ஒரு வசீகர தன்மையை தரும்.

மஞ்சள் கலந்துள்ள நீரை தொடர்ந்து பருகி வரும் காமாலைநோய்காரர்கள் அதிலிருந்து விடுபடுவார்கள்.

அம்மை கொப்புளங்கள்,சேற்றுப்புண், நாள்பட்ட புண்களால் அவதியுறுவோர்,மஞ்சளுடன் சம அளவு வேப்பிலையை நீர்விட்டு அரைத்து பற்றுப்போட்டால் அத்தகைய உபாதைகள் சரியாகிவிடும் .


## அமுக்கிராங்கிழங்கு

எல்லா நாட்டு மருந்து கடைகளிலும் கிடைக்கும் அமுக்கிரான் கிழங்கு. நரம்புத் தளர்ச்சியின் விளைவாக சிலருக்கு வேலை செய்கையில் விரல் நடுக்கம் ஏற்படும், இக்கிழங்கில் கொஞ்சம் எடுத்து நசுக்கி வீட்டுபனை வெல்லத்துடன் சேர்த்து காப்பி போடுவது போல் காய்ச்சி குடிக்க, நடுக்கம் நின்றுவிடும்.






எல்லோரிடமும்
அன்பு காட்ட, என்
சமயம் போதிக்கிறது.
----- மகாத்மா காந்தி



# எறிபத்த நாயனார்

~ ரா.பன்னீர் செல்வம்




நாயன்மார்கள் அனைவருமே பரமனை தங்கள் பக்தியால் பூவுலகு நோக்கி வர வைத்தார்கள். அந்த அளவுக்கு அதாவது இறைவனே தேடிவந்து தரிசனம் கொடுத்து ஆட்கொள்ளும் அளவுக்கு பக்தியில் சிறந்தவர்கள்; பரமனின் கருணையைப் பெற்றவர்கள்; தங்களது தன்னலமற்ற பக்தியால், தொண்டுள்ளத்தால் சிவபெருமானின் அன்பினைப் பெற்று உயர்நிலை அடைந்தவர்கள் என்றால் அது மிகையாகாது! அப்படிப்பட்ட நாயன்மார்களில் சற்றே வேறுபட்டு நிற்பவர் தான் எறிபத்த நாயனார் அவர்கள்! இன்று கரூர் என்று அழைக்கப்படுகின்றன கருவூர் என்னும் பெருமை மிகு புண்ணிய தலத்தில் அவதரித்தவர் தான் எறிபத்த நாயனார்!

மென்மையும் அன்பும் கனிவும் கருணையும் கொண்டது மட்டுமல்ல, சிறந்த பக்தி, அதனினும் மேம்பட்ட சில அம்சங்கள் உண்டு! நமது எறிபத்தரின் கருணையிலும் ஒரு கடுமை இருந்தது! அவரது அன்பிலும் ஓர் ஆத்திரம் இருந்தது! பூப்போன்ற அவரது உள்ளத்தில் புயலும் குடிக்கொண்டிருந்தது. இத்தனை அம்சங்களின் மொத்தக் கலவை தான் எறிபத்தர்!

கொடுமைகளை வேரறுக்க மழுவாயுதம் தாங்கிய சிவநெறிச் செல்வர் இவர். ஆண்டவனுக்கு ஓர் அவமரியாதை என்றால் இவரது நெஞ்சில் ஆத்திரம் அனலாய்க் கொழுந்துவிடும். அநீதியை-ஆணவத்தை, அதற்கு காரணமானவர்களை வெட்டி விழத்தும்வரை ஓயாத சிவபக்தர் இவர் என்றால் இவரது தீவிர சிவபக்தியின் தன்மையை என்னவென்று உரைப்பது?!...

இவரது பக்தி நெறியை உலகம் அறிய செய்ய பரமன் நடத்திய திருவிளையாடலை பார்க்கும் முன் இதே கருவூர் நகரில் நடந்த் வேறு ஒரு நிகழ்வினை பார்த்துவிடலாம்.

சிவகாமியாண்டார் என்னும் எளியோரது இல்லம்!

இந்த சிவகாமியாண்டார்,நந்தவனம்,தோட்டம், துரவு என்று அலைந்து, அன்றலர்ந்த மலர்களை கொய்து அவற்றை மாலைகளாகவும் மலர்சரங்களாகவும் தொடுத்து, தேனாறும் அந்த நறுமண பூக்களின் தொகுப்பை உலகாளும் ஈசனுக்கு சார்த்த, ஆலயத்தில் கொண்டுசேர்க்கும் அரும்பணியை பல தலைமுறைகளாக செய்து வருபவர்.

இறைவனின் திருத்தோள், திருவடி என அனைத்தையும் அலங்கரிக்கும் மலர்களை இவர் கொய்யும் அழகே பேரழகு! மலர்களின் மென்மை கெடாவண்ணம், காம்புகூட அறியாதபடி, இறைவனை மனதில் வரித்தே பக்தியுடன் மலர்களை கொய்வார்.

கொய்த மலர்களைக் கொண்டு வந்து தன் இல்லத்தில் சேர்ப்பார்! குடும்ப அங்கத்தினர்

அனைவரும் அமர்ந்து அவற்றை மாலைகளாகவும் சரங்களாகவும் வடிவமைப்பார்கள்.

ஒரு நாள், இப்படி குடும்பமே அமர்ந்து மலர் வேலையில் ஈடுபட்டிருக்க, பணியாள் ஒருவன் தான் தொடுத்த மலர் மாலை ஒன்றை சற்று தூரத்தில் இருந்த பூக்குடலையை நோக்கி அதனுள்ளே விழுமாறு போட்டான்.
அதைக்கண்டு பதறிவிட்டார், சிவகாமியாண்டார்." தம்பி,
நீ செய்த செயலால் என் உடல் நடுங்குகின்றது! நாம் செய்வது இறைத்தொண்டு! சிவப்பணிக்கு அர்ப்பணிக்க வேண்டிய பூமாலையை இப்படி வீசியெறிகிறாயே ; என சற்றே கோபத்துடன் கேட்டார்.

"அய்யா..... பூக்குடலையில் தானே போட்டேன்; அது சரியாக குடலையில் விழும் என்று எண்ணி, சரியாகத்தான் போட்டேன்!
இதில் என்ன பிழையிருக்கிறது?! என ஏதும் அறியாதவனாய் இயல்பாக கேட்டான், அந்தப் பணியாள்!

"நன்றாகக் கேட்டாய் போ! ஏனப்பா, இது என்ன திருமண மண்டபத்திற்கு கொண்டு போகும் மாலையா? இறைவனின் திருவடிக்கு செல்வது! நாம் செய்வது ஒரு சாதாரண பணியல்ல; இறைத்தொண்டு!" இங்கே பணியை விட, பனிமலர்களை பாங்குடன் சேர்க்க பக்தியும் அவசியம்!" என நா தழுதழுக்க கூறினார் சிவகாமியாண்டார்!
நிலைமையை உணர்ந்தவனாய் அந்தப் பணியாள், "என்னை மன்னியுங்கள் அய்யா! இனி இப்படி ஒரு தவறை மறந்தும் செய்ய மாட்டேன்," என கூறினான்.
அருகில், மலர்களை அடுக்கி கொண்டிருந்தபனியாள் தன்னை மறந்து மெல்ல சிரிக்க, "ஏன் சிரிக்கிறாய்?" என்றான், தவறிழைத்த பணியாள்!" அதற்கு மற்றவன், "ஏதோ.... இப்படி ஒரு செயல், நாலு
சுவருக்கு மத்தியில் இங்கே நடந்துவிட்டது! நமது குருநாதரும் உன் தவறை நீ உணரும்படி சொல்லி, மன்னித்து விட்டார்! ஆனால்....."
என சிவகாமியாண்டாரை பார்க்க.....

அவர், "வேண்டாம் அதை நினைவு படுத்தாதே! அந்த எறிபத்தர் மட்டும் இதை தன் கண்ணால் கண்டிருந்தால், இந்நேரம் மாலையை வீசியெறிந்த உனது கை மண்ணில் வீழ்ந்திருக்கும்... நல்ல வேளை!" அவனைப் பார்த்து ஒரு பெருமூச்சு விட்டார்! கண்களில் பயம் தெரிய, 'அப்படியா?' என்றான், அந்த பணியாள்!
"ஆமாம்! ஒரு முறை நந்தவனத்திலே இருந்த ஒரு செவ்வரளிப் பூஞ்செடி லேசாக சாய்ந்திருந்தது! அதன் அடியிலே மண்ணை அணைத்த தோட்டக்காரன், மண் நன்றாக இறுக்கும்படி கால்களால் உதைத்து அழுத்தி, செப்பனிட்டான்!

அந்த நேரம் பார்த்தா அவர் அங்கு வர வேண்டும்? இறைவனின் பூஜைக்கு மலர் கொடுக்கும் செடியை இப்படி காலால் உதைத்துதான் காப்பாற்ற வேண்டுமா? மண்வெட்டி இல்லாமல்
போனதா? என கேட்டபடி தன் கையில் எப்போதும் வைத்திருக்கும் மழு வாயுதத்தால் தோட்டக்காரனின் காலை வெட்டிவிட்டார்! அவன் காலில் வழிந்த ரத்தத்தை பார்த்து, எனக்கே மயக்கம் வந்துவிட்டது!... இறைவனின் தொண்டில் சிறிதுகூட அலட்சியமோ அவமரியாதையோ கூடாது என நினைப்பவர் தான் எறிபத்தர்: "நல்லவேளை..... அவர் இங்கு இல்லாததால் உன் கை தப்பியது," என்றார் சிவகாமியாண்டார்.

அவர் சொல்லி முடிக்கவும் அந்தப் பணியாள், தன் கையினை ஒருமுறை உற்றுப் பார்த்தான். மெல்ல அவன் உடல் நடுங்கியது. சாய்ந்து, தாவி பூக்குடலையை தன்னருகே இழுத்து வைத்துக்கொண்டான்! ஒவ்வொரு மலரை எடுத்து தொடுக்கும் போதும் அதை கண்களில் ஒற்றிய பின்பே பக்தியோடு தொடுக்கத் தொடங்கினான்.
இங்கு நடைபெற்ற சம்பாஷணையில் எறிபத்தரைபற்றி சிவகாமியாண்டார் சொன்னதில் அதிகப்படியாய் எதுவுமே இல்லை. ஆண்டவனை மட்டுமல்ல; அவன் பூஜைக்குரிய பொருட்களைக் கூட அவமதிப்பதை எறிபத்தரால் பொறுத்துக் கொள்ளவே முடியாது என்பதுதான் உண்மையிலும் உண்மை!
இப்படிப்பட்ட அதிதீவிரவாதம் பக்தியிலும் உண்டு என்பதை உலகுக்கு உணர்த்த, ஈசன் எண்ணம் கொண்டான். இதன்மூலம் எறிபத்தர் கொண்டது இணையில்லா பக்தி என்பதை இறைவன் உணர்த்த விரும்பிய காலம் கனிந்தது! அதுவும் சிவகாமியாண்டார் வாயிலாகவே!



ஒரு நாள்….. வழக்கம்போல, பூஜைக்கான மாலைகள் மற்றும் மலர்ச்சரங்களை பூக்குடலைகளில் நிரப்பிக்கொண்டு ஆனிரையப்பர் ஆலயம் நோக்கி, வேகமாக நடந்துகொண்டிருந்தார் சிவகாமியாண்டார்.
அப்போது ஒரு திசையிலிருந்து மக்கள் பதட்டத்தோடு ஓடி வந்தனர். அனைவருமே, "யானை.. யானை.. ஓடுங்கள்"... என கத்தியபடி தலைதெறிக்க ஓடினர். சிவகாமியாண்டாரோ பூஜைக்கு நேரமாகிவிட்டதே என்னும் சிந்தனையோடு எதையும் பொருட்படுத்தாமல் கோவிலை நோக்கி நடந்தார்!
எதிரே…..

யார் என்ன துன்பம் இழைத்தார்களோ தெரியவில்லை… தறிகெட்டு ஓடி வந்தது பட்டத்து யானை; அதனை அடக்க இயலாதவர்களாய், உடன் ஓடி வந்து கொண்டிருந்தார்கள் மூன்று பாகர்கள். யானை ஓடி வருவதைப் பார்த்த சிவகாமியாண்டார் அஞ்சியபடி ஓரமாக ஒதுங்கி, பூக்குடலைகளை தூக்கி, தன் முகத்துக்கு நேரே மறைத்தபடி நின்றுகொண்டார்.
எதையோ நோக்கி ஓடிக் கொண்டிருந்த யானை, திடீரென்று நின்று சிவகாமியாண்டாரின் பக்கம் திரும்பியது; ஆவேசமாக அவரை நோக்கி சென்றது. துதிக்கையை நீட்டி பூக்கூடைகளை பறித்து, தரையில்
வீசி எறிந்தது!

'தான் பக்தியுடன் தொடுத்த மலர்கள் மகேசனை சேரும் முன்பே மண்ணில் புரள்கிறதே'.... என நினைத்து சிவகாமியாண்டாரின் கண்களில் கண்ணீர் கசிந்தது!
அந்த நேரம் பார்த்தா எறிபத்தர் அங்கே வந்து சேர வேண்டும். பார்த்தார்; உற்றுப் பார்த்தார்!

யானையின் ஆவேசம்; பாகர்களின் மிரட்சி; சிவகாமியாண்டாரின் கண்ணீர்….எல்லாவற்றிற்கும் மேலாக தரையில் கிடந்த மாலைகள் மலர்த்தார்கள் சிதறி, மண்ணோடு மண்ணாய் பிணைந்து கிடக்கும் மலர்மாலைகள்!.........





புரிந்துகொண்டார்…. சினம் மூண்டது….. வெகுண்டெழுந்தார். தன் கையில் வைத்திருந்த மழுவாயுதத்தை ஓங்கியபடி, "சிவபிரானின் பூஜைக்குரிய மலர்களையா தரையில் எறிந்தாய்"..... என்றபடி, யானையை வெட்டினார். அந்த அடங்காத யானை ரத்தம் வழிய நின்றது; மீண்டும் வெட்டினார். பிளிறியபடி யானை தரையில் சாய்ந்தது!

எறிபத்தரின் கோபம் அடங்கவில்லை. "வளர்க்கும் யானையை அடக்க முடியாத நீங்களெல்லாம் பாகர்களா? என்றபடி பாகர்கள் மூவரையும் வெட்டினார். அலறியபடி விழுந்தனர் மூவரும்!

ஆத்திரம் அடங்காதவராய் சுற்றிலும் கோபத்துடன் நோக்கினார். சுற்றி நின்று வேடிக்கை பார்த்தவர்கள் அஞ்சி, சிதறி ஓடினர்.
"இறைவனின் பூஜைக்கு இன்னல் விளைவிக்கும் அனைவருக்கும் இதே கதிதான்" என்றபடி சற்றும் சினம் தனியா தவராய் அங்கேயே அமர்ந்து விட்டார். செய்வதறியாது நடுக்கத்துடன் பார்த்தபடி வெலவெலத்து நின்றார் சிவகாமியாண்டார்.



இதற்குள், பட்டத்து யானையை எறிபத்தர் வெட்டி விட்டார் என்னும் செய்தி, கருவூர் மன்னனுக்குத் செய்து மன்னனுக்கு எட்டிவிட்டது! மன்னன் தன்னுடன் சில வீரர்களை அழைத்துக்கொண்டு, யானை வெட்டுப்பட்ட இடம் நோக்கி நடந்தான். வருகின்ற வழியிலேயே நடந்ததை அறிந்தான். வந்து சேர்ந்தான் மன்னன்!
ரத்த வெள்ளத்தில் பட்டத்து யானையும் பாகர்களும் வீழ்ந்து கிடப்பதையும் மாலைகள் சிதறிக்கிடப்பதையும் ஆவேசம் தணியாமல் எறிபத்தர் மழுவாயுதம் தாங்கி காலபைரவரை போல் அமர்ந்திருப்பதையும் கண்டான் மன்னன்.

எறிபத்தரோ எதைப்பற்றியும் கலங்காமல் பட்டத்து யானையைக் கொன்றதால் அரசன் என்ன நினைப்பானோ என்கிற அச்சம் சிறிதுமின்றி அமர்ந்திருந்தார்.
மன்னன் மெல்ல அவரை நோக்கி நடந்தான். இதைக்கண்ட சிவகாமியாண்டார், பட்டத்து யானையை கொன்றதற்கு மன்னன் எறிபத்தருக்கு என்ன தண்டனை தரப்போகிறாரோ; என எண்ணி கலங்கி நின்றார்.

ஏறிபத்தரை நெருங்கிய மன்னன், "சிவத் தொண்டரே! உங்கள் பக்தியையும் சேவைகளையும் நான் நன்கறிவேன்.பட்டத்து யானையோடு இத்தனை உயிர்களை பலியிட்டும் தங்கள் கோபம் இன்னமும் குறையாமல் இருப்பது ஏன்?...
பூஜைக்கு சென்ற பூக்கள் பூமியில் கிடப்பதற்கு காரணம் நானே!...
நானேதான்!.....எனக் கலங்க,

எறிபத்தர் திகைப்புடன் மன்னனைப் பார்க்க, மன்னன், "ஆம் அன்பரே! பட்டத்து யானைக்கு யாரேனும் தீங்கு இழைத்தால் அவர்களை தண்டிப்பவன் நான். ஆனால், இன்று பட்டத்து யானையே சிவபூஜைக்கு தீங்கிழைத்து விட்டது. அதற்குரிய தண்டனை முழுக்க என்னையே சேரும்! இந்தாருங்கள்...." என தன் உடைவாளை உருவி எறிபத்தரிடம் நீட்டி, "என்னையும் வெட்டி வீழ்த்துங்கள்; தங்கள் மனம் அமைதி பெறட்டும்," என பணிந்து நின்றார்.

வாளையும் மன்னனையும் மாறி மாறி பார்த்த எறிபத்தர், உடல் நடுங்க, அந்த வாளினை வாங்கி, "மன்னர் பெருமானே! பட்டத்து யானையின் தவறை பாராளும் மன்னனான தாங்கள் ஏற்றுக்கொண்டு,

உயிர்த்தியாகம் செய்ய முன்வந்த உங்களை விடவா என்சிவபக்தி சிறந்தது?? அரசே! தங்களின் பெருங்குணம் அறியாமல் பிழைசெய்த என் பக்தி, தங்களின் முன்னால் தோற்றுவிட்டது, சிவன் மீது கொண்ட மாறாபற்றினால் தவறு செய்த எனக்கு, தண்டனை இதுவே, என வாளினை தன் மார்பில் பாய்ச்சிக்கொள்ள துணிந்தார் எறிபத்தர்!

என்ன ஆச்சரியம்!? வாள் மறைந்து போனது! வானில் பரமன் தோன்றினார், "எறிபத்தா! உன் தீவிர பக்தியை உணர்த்தவே இந்த நிகழ்வை நடத்தினோம். நீ நாயன்மாராய் உயர்ந்து எம்மை வந்தடைவாயாக?" எனக்கூறி மறைந்தார்.

யானையும் பாகர்களும் உயிர் பெற்றனர். மன்னர் எறிபத்த நாயனாரை வணங்கி நின்றான்.



# சமயத்தில் அருளும் சமயபுரத்தாள்!!

~ திருவாரூர் சு.சேகர்

சக்தி இல்லாமல் இந்தப் பிரபஞ்சமே இல்லை. சிவத்துக்கே சக்தியாகத் திகழ்கிறாள் பராசக்தி. சக்திதேவியானவள், பலப்பல வடிவங்களில், வெவ்வேறு திருநாமங்களில் ஒவ்வொரு ஊரிலும் குடிகொண்டு அருள்பாலித்து வருகிறாள். அப்படியான தெய்வங்களில், நம்மை ஆட்கொண்டு ஆட்சி செய்பவள்தான் சமயபுரம் மாரியம்மன். இந்த கலியுகத்தில் கேட்டவருக்கு உரிய சமயத்தில் கேட்கும் வரம் தந்து அருள்பவர் என்பதால், 'சமயபுரத்தாள்' என்று அழைக்கப்படுவதாகவும் கூறப்படுகிறது.

சமயபுரத்து மாரியம்மன், இங்கு, ஆயிரம் கண்ணுடையாள், கண்ணபுர நாயகி, சாம்பிராணி வாசகி, அகிலாண்ட கோடி பிரம்மாண்ட நாயகி, கௌமாரி, மகமாயி, நீலி திரிசூலி நீங்காத பொட்டுடையாள் என்ற பல பெயர்களில் கேட்டதையும், தகுதியுடையவர்களுக்கு அவர்கள் கேட்காததையும் கொடுக்கும் கற்பக விருக்ஷமாக விளங்குகின்றார். இங்கு, அம்பாள் சிவ ரூபமாகக் கருதப்படுவதால் விபூதி விசேஷ பிரசாதமாக வழங்கப்படுகிறது.

## கோயிலின் ஸ்தல வரலாறு:

எமதர்மனின் சபையில் இருந்த மாயாசூரன் பூவுலகில் நோய்களைப் பரப்பி மக்களைத் துன்புறுத்தினான். அவனோடு அவனது சகோதரர்களும் சேர்ந்து மக்களை துன்புறுத்தினார்கள்.

சிவபெருமான் இதனை தடுக்க வேண்டும் என்று பார்வதி தேவியிடம் கூற, பார்வதி தேவி தன் அம்சமாக மாரியம்மனை தோற்றுவித்து, மாயாசூரனை வதம் செய்ய அனுப்பிவைத்தாள். மாரியம்மன் மாயாசூரனையும் அவனது சகோதரர்களையும் வதம் செய்து, அவர்கள் தலையை ஒட்டியாணமாக அணிந்து நோய்களின் கொடுமைகளிலிருந்து மக்களைக் காப்பாற்றினாள்.

பிறகு சிவபெருமானின் கட்டளைப்படி தனது சகோதரர் ஸ்ரீரங்கம் ரங்கநாதர் கோவிலில் ஆதியில் 'வைஷ்ணவி' என்ற பெயரில் ஸ்ரீரங்கத்தில் குடி கொண்டிருந்ததாகக் கூறுவர்.



வைஷ்ணவி தேவி கோரைப் பற்கள் மற்றும் சிவந்த கண்களுடன் உக்கிரமாக கட்சியளித்தாராம். அங்கு அப்போதிருந்த ஜீயர் சுவாமிகள், அந்த அம்மனை வேறு இடத்தில் பிரதிஷ்டை செய்ய ஏற்பாடு செய்தார். அதனால் சிலர் அந்தத் திருவுருவை எடுத்துக்கொண்டு வடக்கு நோக்கிச் சென்றனர், வழியில் ஓர் இடத்தில் இளைப்பாறினர் (அந்த இடம் தற்போது இனாம் சமயபுரம் (தாய் வீடு) எனப்படுகிறது.) பிறகு அம்மன் திருவுருவை எடுத்துக்கொண்டு தற்போதுள்ள மாரியம்மன் கோயில் அமைந்துள்ள கண்ணனூர் அரண்மனை மேட்டை அடைந்து, அதனை அங்கு ஓலைக் கொட்டகை ஒன்றில் வைத்து விட்டுச் சென்றனர். எனவே, அம்மன், 'கண்ணனூர் அம்மன்' என்றும், 'கண்ணனூர் மாரியம்மன்' என்றும் அழைக்கப்பட்டார்.

ஒரு சமயம், தென்னாட்டின் மீது படையெடுத்து வந்த விஜயநகர மன்னர், தன் படைகளோடு கண்ணனூர் காட்டில் முகாமிட்ட சமயம், அங்கிருந்த மாரியம்மனை கண்டு வழிபட்டார். அவர்கள் தாம் ஈடுபட்டு உள்ள யுத்தத்தில் வெற்றி பெற்றால் அந்த அம்மனுக்குக் கோயில் கட்டுவதாக வேண்டிக் கொண்டார்.

அதன்படி அவர்கள் யுத்தத்தில் வெற்றி பெற்று திரும்பி வந்ததும், அம்மனுக்குத் திருக்கோயில் கட்டி, பரிவாரத் தெய்வங்களாக விநாயகரையும், கருப்பண்ணசாமியையும் பிரதிஷ்டை செய்து, குடமுழுக்கு விழா நடத்தி, நித்திய பூஜைக்கான ஏற்பாடுகளையும் செய்தார் என்கிறது வரலாறு.

இன்றும் இந்த விபரங்களை அறிந்தவர்கள் இனாம் சமயபுரம் சென்று ஆதி மாரியம்மனைத் தரிசித்த பின்னரே கண்ணனூர் வந்து சமயபுரம் மாரியம்மனைத் தரிசிக்கின்றனர். இந்த மாரியம்மன் கோயிலின் வடக்கே செல்லாயி அம்மன், போஜீஸ்வரன் மற்றும் கிழக்கே உஜ்ஜயினி மாகாளி முக்தீஸ்வரன் கோயிலும் இடம்பெற்றுள்ளன.

## சமயபுரத்தாளின் திருக்கோலம்:

பக்தர்களுக்கு சமயத்தில் வேண்டிய வரங்களைக் கொடுத்து, காத்துவரும் அம்மனின் அழகு தெய்வீகமானது. நெற்றியில் திருநீறு மற்றும் குங்குமம். ஜொலிக்கும் தோடுகள், மூக்குத்தி ஆகிய அலங்காரத்துடன், சிவப்பு நிற மேனியோடு, அம்மன் எட்டு கைகளுடன், தலை மாலை கழுத்தில், சர்ப்பக் குடையுடன், இடது காலை மடக்கி (மடித்து) வைத்து, வலது காலை தொங்கவிட்டபடி வீற்றிருக்கிறார். மாயாசூரன் தலைமீது வலது கால் பதித்துள்ளாள். அதன் வலப்பக்கம் அசுரன் சண்டன் தலை, இடப்பக்கம் அசுரன் முண்டனின் தலையென, அம்பாளின் வலது காலின் அடியில் மூன்று அசுரர்களின் தலைகளைத் தன் காலால் மிதித்து விக்கிரம சிம்மாசனத்தில் அமர்ந்தபடி இருபத்தி ஏழு நட்சத்திரங்களின் ஆதிக்கங்களையும் தன்னுள் அடக்கி, இருபத்தி ஏழு யந்திரங்களாக திருமேனி பிரதிஷ்டையில் அருள் புரிகிறார் சமயபுரத்தாள். (சுயம்புவும் கருவறை மூலவருமான மாரியம்மன். பூவுலகில் வேறெந்த மாரியம்மனுக்கும் விக்கிரம சிம்மாசனம் கிடையாது என்பது இத்தலத்தின் தனிச் சிறப்பு. “இங்கு வந்து பிரார்த்தனை செய்துகொண்டால், அது நிச்சயம் நிறைவேறும்.” என்கிறார்கள் பக்தர்கள்)

கருவறையின் பின்புறம் அம்மனின் பாதங்கள் உள்ளன. இதற்கு மலர் சூடி, தீபம் ஏற்றி வழிபடுகிறார்கள்.

இங்குள்ள அம்பாளின் உக்கிரத்தை தணிக்க, ஸ்ரீ காஞ்சி மகா பெரியவரின் ஆலோசனைப்படி, நுழைவாயிலின் வலப்புறத்தில், ஒரே சந்நதியில் ஞான சக்தி, இச்சா சக்தி, கிரியா சக்தி வடிவங்களாக மூன்று விநாயகர்களை பிரதிஷ்டை செய்தனர். அதன்பின் அம்மனின் மூல விக்கிரகத்தில் கோரைப்பற்கள் அகற்றப்பட்டு, சாந்த சொரூபியாக மாற்றி 1970-ல் கும்பாபிஷேகம் செய்தனர்.அம்பாளின் கருவறையைச் சுற்றி எப்போதும் நீர் நிறைந்திருக்குமாறு ஈரத் தன்மையுடன் வைத்திருக்கிறார்கள். அம்பாள் எப்போதும் குளிர்ச்சியாக இருப்பதற்காக இந்த ஏற்பாடு. சமயபுரத்தாள் விக்கிரகம் மூலிகைகளால் ஆனதால், இதற்கு அபிஷேகம் கிடையாது. உற்சவர் அம்மனுக்கு மட்டுமே அபிஷேகம். சமயபுரத்தாளின் கருவறை மற்றும் கருவறை விமானம் தங்கத் தகடுகளால் வேயப்பட்டுள்ளன.

தமிழில் மாரி என்றால் மழை என்பது அர்த்தம். ஆகவே மழையைப் போல அருளை பொழிபவள் என்பதினால் தேவி மாரியம்மன் என அழைக்கப்பட்டார். அதனால் இந்த ஆலயத்துக்கு வருகைத் தரும் பக்தர்கள் தேவி சமயபுரத்தாள் தமக்கு உடல் நலத்தையும், செல்வத்தையும் வாரி வழங்குவாள் என நம்புகிறார்கள்.

## திருக்கோயில் அமைப்பு:

இக்கோயில் ஐந்து நிலை ராஜகோபுரத்துடன் கிழக்கு நோக்கி அமைந்துள்ளது. மூன்று பிராகாரங்கள் கொண்ட இந்தக் கோயில் முகப்பில் நீண்ட மண்டபம் ஒன்றுள்ளது. மூன்றாம் பிராகாரத்தில் பௌர்ணமி மண்டபம், நவராத்திரி மண்டபம், வசந்த மண்டபம் ஆகியவை அமைந்துள்ளன. இரண்டாம் பிராகாரத்தில் விநாயகர், மாரியம்மனின் உற்சவ மூர்த்தி மற்றும் கருப்பண்ணசாமி ஆகியோரது சந்நிதிகள் உள்ளன. இங்கு ஒரே சந்நிதியில் மூன்று விநாயகர்கள் அருள் புரிகிறார்கள்.

சமயபுரம் கோவில் கொடிமரத்தை அடுத்துள்ள மண்டபத்தூண்களில் நாயக்க மன்னர்களின் உருவங்களைக் காணும்போது சுமார் 700 ஆண்டுக்ளுக்கு மேலாக சக்தித் தலங்களுள் ஒன்றாக விளங்குவதை உணரமுடிகிறது.

கோயிலின் முன் மண்டபத்தில் படுத்து உறங்குபவருக்கு அர்த்த ஜாமத்தில் அம்பாளின்



கொலுசுச் சத்தம் கேட்கும் அதிசயம் இன்றும் நிகழ்கிறது. அம்மை நோய் தீர்க்கவும், நகர சாந்திக்காகவும் அம்மன் இரவு நேரத்தில் உலா வருவதாக ஐதீகம்.

விஜய நகர மன்னர்கள் காலத்தில் ஸ்தலவிருட்சத்தின் கீழே உள்ள புற்றிலிருந்து ஒரு நல்லபாம்பு அர்த்தஜாமப்பூஜை (இரவு பூஜை) முடிந்ததும் கருவறைக்குள் சென்று அம்மனைப் பூஜிக்குமாம். அப்போது பூக்கள் கருவறையில் சிதறிக்கிடக்கும் காட்சியை மறுநாள் அதிகாலை காலப் பூஜைக்குக் கருவறையில் நுழையும் அர்ச்சகர்கள் தவறாமல் காண்பது வழக்கமாம். பக்தர்கள் நடமாட்டம் அதிகமான பிறகு அந்த நல்லபாம்பு வெளியே வருவதில்லை. அந்த இடத்திற்கு இப்போது கம்பிக் கதவு போட்டிருக்கின்றார்கள்

சமயபுரம் கோயிலின் ஸ்தல விருட்சம் வேப்ப மரம். இங்குள்ள பெருவளை வாய்க்கால் மற்றும் மேற்கே உள்ள மாரி தீர்த்தம் (தெப்பக்குளம்)இக்கோயிலின் தீர்த்தங்களாகும்.

## திருவிழாக்கள்:

சமயபுரத்தாளைக் காண தினமும் ஆயிரக்கணக்கில் பக்தர்கள் கூட்டம் வந்து கொண்டே இருக்கிறார்கள். செவ்வாய், வெள்ளி மற்றும் ஞாயிற்று கிழமைகளில் கூட்டம் கொஞ்சம் கூடுதலாகவே இருக்கும். விழாக்காலங்களில் அதிக கூட்டம் வரும். வழக்கமான பூஜைகள் மட்டுமின்றி, ஆடிப்பெருக்கு, ஆனி பிரம்மோத்ஸவம், ஆருத்ரா தரிசனம், அன்னாபிஷேகம், சித்திரை பிரம்மோத்ஸவம், குரு பெயர்ச்சி, கார்த்திகை தீபம், நவராத்திரி, பங்குனிப் பெருவிழா, தீர்த்தவாரி, தெப்போத்சவம் போன்றவை சிறப்பு விழாக்களாகும். இது தவிர பல திருவிழாக்கள் சிறப்பான முறையில் நடத்தப்படுகின்றன.

சமயபுரம் மாரியம்மன் கோவிலில் ஆடி வெள்ளித் திருவிழா சிறப்பாக நடைபெறுகிறது. ஆடி மாதத்தில் எல்லா வெள்ளிக் கிழமைகளிலும் கூட்டம் மிக அதிக அளவில் இருக்கும்.
ஆடி கடைசி வெள்ளிக்கிழமையை மிகச்சிறப்பாக கொண்டாடுவார்கள்.

சித்திரைத் தேர்த்திருவிழாவன்று சமயபுரத்தாளை ஆயிரக்கணக்கானோர் வந்து தரிசித்து செல்கின்றனர். தேர்த்திருவிழாவின் பத்தாம் நாள் திருவானைக்காவில் அருள்புரியும் ஜம்புகேஸ்வரர் மாரியம்மனுக்கு சீர்வரிசை அனுப்பி வைப்பார்.



இன்றும் சமயபுரம் மாரியம்மனுக்கு தைப்பூச நன்னாளில் ஸ்ரீரங்கம் ரெங்கனாதரிடம் இருந்து சீர்வரிசைகள் வருகின்றன.
ஈஸ்வரனிடமும், அண்ணன் அரங்கனிடமும் சீர்வரிசை பெறும் அம்மன் சமயபுரம் மகமாயி மட்டும்தான்.

அதுபோல மாசியில் அம்மன் பச்சை பட்டினி விரதம் இருக்கும் போது, சமயபுரத்தில் பூச்சொரிதல் விழா நடைபெறும். அப்போது சமயபுரத்தாளுக்கு முதல் பூவாக ஸ்ரீரங்கம் ரெங்கநாதரிடம் இருந்து வரும் பூவே சூடப்படுகிறது.

பச்சை பட்டினி விரத காலமான மாசி முதல் பங்குனி கடைசி ஞாயிறு வரை இருபத்தி ஏழு நாட் களும் அம்பாளுக்கு ஒரு வேளை மட்டும் அதாவது சாயரட்சை (மாலை வேளை) பூஜையின்போது இளநீர், மோர், பானகம், துள்ளு மாவு (பச்சை அரிசி மாவு, நாட்டுச் சர்க்கரை), வெள்ளரிப் பிஞ்சு ஆகியவற்றை நைவேத்தியம் செய்வார்கள். இந்தக்

காலத்தில் ஊர் மக்களும் அம்மனுடன் சேர்ந்து விரதம் இருப்பது வழக்கம்.

சித்திரை மாத இறுதியில் தொடங்கி வைகாசி முதல் தேதி வரை பஞ்சப் பிராகார உற்சவம் சிறப்பான முறையில் நடைபெறுகின்றது.



## நேர்த்திக்கடன்கள்:

சமயத்தில் அருள்வாள் சமயபுரத்தாள் எனபதற்கு ஏற்றபடி பக்தர்களின் வேண்டுதல்களை எங்கிருந்து வேண்டிக்கொண்டாலும் நிறைவேற்றி கொடுக்கிறார்.

கண்நோய், உடலின் பல்வேறு பகுதிகளில் ஏற்படும் உபாதைகள் போன்ற பல்வேறு பிரச்சனைகளில் இருந்து விடுபடவும், குழந்தை வரம் வேண்டி மாரியம்மனை பக்தர்கள் வழிபடுகின்றனர்.

பலனை பெற்ற பக்தர்கள் கண்மலர், உடல் உறுப்புகள், உப்பு மற்றும் மிளகு, பலிபீடத்திற்கு அபிஷேகம், கண், வயிறு போன்றவற்றில் மாவிளக்கு ஏற்றி வழிபடுகின்றனர்.

இங்கு பக்தர்கள் ஈர உடையுடன் அங்கப்பிரதட்சணம் செய்து, வழிபடுவதுடன், ஆடு, கோழி, தானியங்கள், உப்பு, வெல்லம் ஆகியவற்றை காணிக்கை செலுத்துகின்றனர். மற்றும், பக்தர்கள் மல்லாந்து படுத்துக் கொண்டு தங்களின் வயிறு மற்றும் கண்களில் மாவிளக்கு தீபம் ஏற்றி வைத்தும் சமயபுரத்தாளுக்கு நேர்த்திக்கடன்கள் செய்கின்றனர்.

கரும்புத்தூளி எடுத்தல் பிரசித்தமான குழந்தைப்பேறு அடைந்த தம்பதியர் நிகழ்த்தும் அருமையான வழிபாடு. குழந்தை வரம் கிடைத்தவுடன், சீமந்தப் புடவை, வேஷ்டியைப் பத்திரமாக வைத்திருந்து, குழந்தை பிறந்ததும் ஆறாவது மாதத்தில் புடவை, வேஷ்டியை மஞ்சள் நீரில் நனைத்து கரும்புத் தொட்டில் தயார் செய்து அதில் குழந்தையைக் கிடத்தி கணவனும் மனைவியும் சுமந்து செல்வார்கள்.

தொழில் பிரச்சனை, ராகு, கேது தோஷம் உள்ளவர்கள் சமயபுரத்தாளை தரிசித்தால், அவள் கண்டிப்பாக பலன் தருவாள் என்பது பக்தர்களின் தீர்க்கமான நம்பிக்கை.

## அம்மை நோய் தீர்க்கும் அபிஷேக தீர்த்தம்:

அம்மை நோயால் பாதிக்கப்பட்டவர்களின் உடலில், அம்பாளுக்கு செய்யப்படும் அபிஷேக தீர்த்தம் தெளிக்கப்பட்டால் அம்மை நோய் விரைவில் குணமடையும் என்பதும் பக்தர்களின் உறுதியான நம்பிக்கையாக இருக்கிறது. அம்மை நோய் பீடித்தவர்கள் தங்கி குணம் பெற இங்கு தனி மண்டபம் ஒன்று உள்ளது. இந்த நோயாளிகளுக்கு தினமும் அம்மனின் அபிஷேகத் தீர்த்தம் பிரசாதமாக வழங்கப்படுகிறது. இதனால் விரைவில் நோய் குணமடைவதாக பக்தர்கள் நம்புகின்றனர்.

இங்கு அம்மனுக்கு மாவிளக்கும், எலுமிச்சம் பழ மாலையும் விஷேசம். இங்கு உயிர்ப்பலி கிடையாது.

வெளிமாநில பக்தர்கள் மட்டும் இன்றி, வெளிநாட்டு பக்தர்களும், அம்பாளின் அருள்பெற இந்தக் கோவிலுக்கு வருகை தருகிறார்கள்.

கோயில் திறந்திருக்கும் நேரங்கள்:
அதிகாலை 05.30 மணி முதல் இரவு 09.00 மணி வரை இடைவேளையின்றி தொடர்ந்து கோயில் திறந்திருக்கும் .திருவிழாக்காலங்களில் மாறுதலுக்குஉட்பட்டது.

## கோயிலுக்கு செல்லும் வழி:

இக்கோயில் திருச்சிராப்பள்ளி ரயில் நிலையம் மற்றும் மத்திய பேருந்து நிலையம் ஆகியவற்றிலிருந்து 20 கிமீ தூரத்திலும், திருச்சியில் சத்திரம் பேருந்து நிலையத்தில் இருந்து சுமார் 15 கி.மீ. தூரத்திலும் அமைந்துள்ளது. இக்கோயிலுக்கு செல்ல நகரப் பேருந்து வசதி உள்ளது.

## மாரி அம்மன் காயத்ரி மந்திரம்

“ஓம் பிசாசத்வஜாய வித்மஹே
கட்க ஹஸ்தாய தீமஹி
தன்னோ மாரி ப்ரசோதயாத்!!”

ஸ்ரீ சமயபுரம் மாரியம்மன் 108 போற்றி!!
ஓம் அம்மையே போற்றி
ஓம் அம்பிகையே போற்றி
ஓம் அனுக்ரஹ மாரியே போற்றி

ஓம் அல்லல் அறுப்பவளே போற்றி
ஓம் அங்குசபாசம் ஏந்தியவளே போற்றி
ஓம் ஆதார சக்தியே போற்றி
ஓம் ஆதி பராசக்தியே போற்றி
ஓம் இருள் நீக்குபவளே போற்றி
ஓம் இதயம் வாழ்பவளே போற்றி
ஓம் இடரைக் களைவாய் போற்றி
ஓம் இஷ்ட தேவதையே போற்றி
ஓம் ஈஸ்வரித் தாயே போற்றி
ஓம் ஈடிணை இலாளே போற்றி
ஓம் ஈகை மிக்கவளே போற்றி
ஓம் உமையவளே தாயே போற்றி
ஓம் உயிர் பிச்சை தருவாய் போற்றி
ஓம் ஊழ்வினை தீர்ப்பாய் போற்றி
ஓம் எலுமிச்சை பிரியையே போற்றி
ஓம் எட்டுத்திக்கும் வென்றாளே போற்றி
ஓம் ஏகாந்த முத்துமாரியே போற்றி
ஓம் ஏழையர் அன்னையே போற்றி
ஓம் ஐங்கரத்தவளே போற்றி
ஓம் ஒற்றுமை காப்பாய் போற்றி
ஓம் ஓங்கார ரூபினியே போற்றி
ஓம் ஔடதம் ஆனவளே போற்றி
ஓம் கவுமாரித்தாயே போற்றி
ஓம் கண்ணாகத் திகழ்பவளே போற்றி
ஓம் கரை சேர்ப்பவளே போற்றி
ஓம் காக்கும் அன்னையே போற்றி '
ஓம் கிள்ளை மொழியாளே போற்றி
ஓம் கீர்த்தி அளிப்பவளே போற்றி
ஓம் குங்கும நாயகியே போற்றி '
ஓம் குறை தீர்ப்பவளே போற்றி
ஓம் கூடிக் குளிர்விப்பவளே போற்றி
ஓம் கை கொடுப்பவளே போற்றி
ஓம் கோலப்பசுங்கிளியே போற்றி
ஓம் சக்தி உமையவளே போற்றி
ஓம் சவுந்தர நாயகியே போற்றி
ஓம் சித்தி தருபவளே போற்றி
ஓம் சிம்ம வாகினியே போற்றி
ஓம் சீரெலாம் தருபவளே போற்றி
ஓம் சீதளா தேவியே போற்றி
ஓம் சூலம் ஏந்தியவளே போற்றி
ஓம் செந்தூர நாயகியே போற்றி
ஓம் செண்பகாதேவியே போற்றி
ஓம் செந்தமிழ் நாயகியே போற்றி
ஓம் சொல்லின் செல்வியே போற்றி
ஓம் சேனைத் தலைவியே போற்றி
ஓம் சோகம் தீர்ப்பவளே போற்றி
ஓம் தத்துவ நாயகியே போற்றி
ஓம் தர்ம தேவதையே போற்றி
ஓம் தரணி காப்பாய் போற்றி
ஓம் தத்துவ நாயகியே போற்றி
ஓம் தர்ம தேவதையே போற்றி
ஓம் தரணி காப்பாய் போற்றி
ஓம் தத்துவம் கடந்தவளே போற்றி
ஓம் தாலிபாக்கியம் தருவாய் போற்றி
ஓம் தாமரைக் கண்ணியே போற்றி
ஓம் தீமை களைபவளே போற்றி
ஓம் துன்பம் தவிர்ப்பவளே போற்றி
ஓம் தூய்மை மிக்கவளே போற்றி
ஓம் தென்றலாய் குளிர்பவளே போற்றி
ஓம் தேசமுத்து மாரியே போற்றி
ஓம் தையல் நாயகியே போற்றி
ஓம் தொல்லை போக்குவாய் போற்றி
ஓம் தோன்றாத் துணையே போற்றி
ஓம் நன்மை அளிப்பவளே போற்றி
ஓம் நலமெல்லாம் தருவாய் போற்றி
ஓம் நாக வடிவானவளே போற்றி
ஓம் நாத ஆதாரமே போற்றி
ஓம் நாகாபரணியே போற்றி
ஓம் நானிலம் காப்பாய் போற்றி
ஓம் நித்ய கல்யாணியே போற்றி
ஓம் நிலமாக நிறைந்தவளே போற்றி
ஓம் நீராக குளிர்ந்தவளே போற்றி
ஓம் நீதி நெறி காப்பவளே போற்றி
ஓம் நெஞ்சம் நிறைபவளே போற்றி
ஓம் நேசம் காப்பவளே போற்றி
ஓம் பக்தர் தம் திலகமே போற்றி
ஓம் பவளவாய் கிளியே போற்றி
ஓம் பல்லுயிரின் தாயே போற்றி
ஓம் பசுபதி நாயகியே போற்றி
ஓம் பாம்புரு ஆனாய் போற்றி
ஓம் புற்றாகி நின்றவளே போற்றி
ஓம் பிச்சியாய் மணப்பவளே போற்றி
ஓம் பிறவிப்பிணி தீர்ப்பாய் போற்றி
ஓம் பிள்ளையைக் காப்பாய் போற்றி
ஓம் பீடை போக்குபவளே போற்றி
ஓம் பீடோப ஹாரியே போற்றி
ஓம் புத்தி அருள்வாய் போற்றி
ஓம் புவனம் காப்பாய் போற்றி
ஓம் பூமாரித்தாயே போற்றி
ஓம் பூவில் உறைபவளே போற்றி
ஓம் பூஜைக்குரியவளே போற்றி
ஓம் பூக்குழி ஏற்பவளே போற்றி
ஓம் பூசல் ஒழிப்பவளே போற்றி
ஓம் மழைவளம் தருவாய் போற்றி
ஓம் மங்கள நாயகியே போற்றி போற்றி
ஓம் மந்திர வடிவானவளே போற்றி

ஓம் மழலை அருள்வாய் போற்றி
ஓம் மண்ணுயிர் காப்பாய் போற்றி
ஓம் மாணிக்க வல்லியே போற்றி
ஓம் மகமாயித் தாயே போற்றி
ஓம் முண்டகக்கண்ணியே போற்றி
ஓம் முத்தாலம்மையே போற்றி
ஓம் முத்து நாயகியே போற்றி
ஓம் வாழ்வு அருள்வாய் போற்றி
ஓம் வீரபாண்டி வாழ்பவளே போற்றி
ஓம் வேம்பில் இருப்பவளே போற்றி
ஓம் ஓம் வையகம் வாழ்விப்பாய் போற்றி.

ஓம் சக்தி! பராசக்தி!!
ஸ்ரீ சமயபுரம் மாரியம்மன் திருவடிகளே சரணம் !!!

என் நாட்டில் தனி ஒரு நாய் கூட உணவு கிடைக்காமல் இருந்தால்,அதற்கு உணவு தருவது என் சமயமாகும். மற்ற அனைத்தும் சமய உணர்வு அற்றது.
----- சுவாமி விவேகானந்தர்



### திருமண தடை நீங்க எளிமையான

# லால் கீதாப் பரிகாரங்கள்

~ ஆஸ்ட்ரோவேட் ஜோதிடர் மு. செந்தில் நாதன்

## லால் கீதாப் என்றால் என்ன?


பழங்கால ஜோதிட நூல்களில் மிக முக்கியமான நூலாக கருதப்படுவது லால் கீதாப் புத்தகம் ஆகும். இந்த லால் கீதாப் புத்தகத்திற்கு தமிழில் சிகப்பு புத்தகம் என்று பொருள் ஆகும். இது உருது மொழியில் இருந்து ஹிந்தி மொழிக்கு மாற்றம் செய்யபட்டது ஆகும். வேத ஜோதிடம், சாமுத்ரிகா சாஸ்திரம், மற்றும் கைரேகை சாஸ்திரம் போன்ற ஐந்து புத்தகங்களின் தொகுப்பாகும். இதில் கூறப்பட்டுள்ள மிக எளிமையான பரிகாரங்கள் வட இந்தியாவில் மிகவும் பிரசித்தி பெற்றதாகும். இந்த கட்டுரையில் திருமணமே ஆகாதவர்களுக்கு விரைவில் திருமணம் நடப்பதற்கு உண்டான பரிகாரங்கள் பற்றி கீழே பார்ப்போம்.

## அறிமுகம்:

திருமணத்தை நமது முன்னோர்கள் ஆயிரம் காலத்து பயிர் என்று அழைத்தார்கள். பழங்காலங்களில் திருமணம் என்பது எளிதான விஷயமாக இருந்தது. அன்று சிறு வயதிலேயே திருமணம் நடந்தது. ஆனால் தற்பொழுதோ 35 மற்றும் 45 வயது வரை திருமணம் ஆகாத பெண்கள் மற்றும் ஆண்களை பார்க்க முடிகிறது. சர்ப்ப தோஷம், களத்திர தோஷம், செவ்வாய் தோஷம் போன்ற பல தோஷங்கள் ஜாதகத்தில் இருப்பதும் திருமணத் தடை மற்றும் தாமதம் ஆவதற்கும் ஒரு மிக முக்கிய காரணமாக அமைகிறது. எந்த தோஷமாக இருந்தாலும் கீழே கொடுக்கப்பட்டிருக்கும் எளிய பரிகாரங்களை சரிவர செய்தாலே எளிதில் திருமணம் நடைபெறும் என்பது உறுதி.

1. திருமண தடைகள் நீங்கி விரைவில் திருமணம் நடக்க சிறிது மஞ்சள். பொடியை குளிக்கும் நீரில் கலந்து குளிக்க வேண்டும். குளித்த பிறகு உங்கள் நெற்றியில் மஞ்சளை திலகமாக இட்டுக்கொள்ள வேண்டும்.

2. பெண் பார்க்கும் சமயம் வரனையும் அவரது குடும்பத்தினரையும் முதன் முறையாக சந்திக்கும் போது பெண்கள் எப்போதும் புதிய ஆடைகளையே அணிய வேண்டும்.




3. திருமணம் பேச்சுவார்த்தை நடந்து கொண்டிருக்கும் இடத்திற்கு பையனோ பெண்ணோ செல்லும்போது, அறைக்கு வெளியே செருப்புகளை அகற்றிவிட்டு பேச்சு வார்த்தை நடக்கும் இடத்தில் கலந்து கொள்ள வேண்டும்.

4. ஒரு பெண்நிற்கு திருமணம் விரைவில் நடைபெற வேண்டும் என்றால் அந்த பெண்ணானவள் 16 திங்கட்கிழமைகள் விரதம் இருந்து, சிவலிங்கத்திற்கு தண்ணீர் ஊற்றி வழிபட்டு வர வேண்டும்.

5. சிவ, பார்வதிக்கு சிவப்பு துப்பட்டா, சிவப்பு வளையல், மற்றும் செந்தூரம் வழங்கி வழிபட்டு வர வேண்டும்.

6. சரியான நேரத்தில் திருமணம் செய்ய விரும்பும் ஆண்கள் விநாயகரிடமிருந்து ஆசீர்வாதம் கிடைக்க வழிபாடு செய்ய வேண்டும்; இது ஒரு பயனுள்ள தீர்வாகும்.

7. விஷ்ணு லட்சுமி கோயிலில் வியாழக்கிழமைகளில் 5 லட்டுக்களை நெய்வேத்தியமாக கொடுத்து வழிபட்டுவர வேண்டும்.

8. பெண்கள் திங்களன்று சிவப்பு நிற நூலிழையில் கட்டப்பட்ட கௌரி சங்கர் (இருமுக) ருத்ராக்ஷத்தை அணிந்து கொள்ள வேண்டும்.

9. திருமணத் தடைகளுக்கு முடிவு கட்ட, ஒரு மங்களகரமான முகூர்த்த நேரத்தில் பூஜையின் போது வாழை மரத்தின் வேரை கொண்டு வாருங்கள். வழிபாடு முடிந்ததும், வேரை மஞ்சள் துணியில் சுற்றி உங்கள் உடலில் கட்டவும்.

10. ஒவ்வொரு வியாழக்கிழமையும் சிவப்பு நிற ஆடைகளை அணிவதன் மூலம் தான் விரும்பியவரை மணமுடிக்க முடியும்.

சமயம் என்பது நடத்தை; வெறும் நம்பிக்கை மட்டுமல்ல
-- டாக்டர் எஸ் ராதாகிருஷ்ணன்



# நினைத்ததை நிறைவேற்றும் வெள்ளெருக்கு விநாயகர்

~ ஆஸ்ட்ரோவேட் ஜோதிடர் பிரபு

முழுமுதற் கடவுள் ஆன விநாயகரை வணங்கி எந்த ஒரு செயல் செய்தாலும் தடைகள் நீங்கி வெற்றி கிடைக்கும் மாபெரும் யாகங்களும் ஹோமங்களும் விநாயகரை வணங்கியே துவங்கப்படுகிறது. அனைவரும் எளிமையாக வணங்க கூடிய விநாயகப் பெருமான் மஞ்சள் பிடித்து வைத்து வணங்கினால் கூட அடுத்த நொடியே அதில் பிரவேசிப்பார் விநாயகரை பல வடிவங்களிலும் வணங்கினால் கூட வெள்ளருக்கு விநாயகரை வைத்து வழிபடுவது மிகச்சிறப்பான பலன்களைத் தரும்.

வீட்டில் வெள்ளெருக்கு விநாயகரை வைத்து வழிபட்டால் நீங்கள் நினைத்த காரியம் கைகூடும். தீமைகள் அகலும் வழக்குகளில் வெற்றி கிடைக்கும் குடும்பத்தில் மகிழ்ச்சி உண்டாகும். வெள்ளெருக்கு விநாயகர் இடம்புரி விநாயகராக இருக்க வேண்டும். மாதம் ஒருமுறை பூஜை செய்ய வேண்டும். பூஜை செய்யும் நாள் சதுர்த்தி திதியாக அல்லது கரசை கரணமாக இருக்க வேண்டும்.

## வழிபடும் முறை:

1. கலசத்தில் மஞ்சள் நீரை நிரப்பி அதனுள் பிள்ளையாரை 3 முறை அந்த நீரில் மூழ்க வைக்க வேண்டும். அப்படி செய்யும் போது உங்கள் கோரிக்கைகளை பிரார்த்திக்க வேண்டும்.

2. மல்லிகைப்பூ, செம்பருத்தி, அருகம்புல் ஆகியவற்றால் அலங்கரிக்க வேண்டும்.

3. விநாயகருக்கு கருப்பு வஸ்திரம் அணிவிக்க வேண்டும்.

4. நைவேத்தியமாக பசும்பால்(அ) ஆட்டுப்பால் வைக்க வேண்டும்.

5. வெற்றிலை, பாக்கு, வாழைப்பழம் வைத்து ஊதுபத்தி காட்ட வேண்டும்.

6. விநாயகரை வணங்கி உங்கள் பிரார்த்தனைகளை நினைத்து தேங்காய் உடைத்து தீப தூபம் காட்ட வேண்டும்.

7. அந்த கலச நீரை மாவிலைகளால் வீடு முழுவதும் தெளிக்க வேண்டும்.



இவ்வாறு தொடர்ந்து வழிபடும்போது அனைத்து நன்மைகளும் நடைபெறும்.

# தன்னம்பிக்கை மற்றும் ஆற்றலை கொடுத்து ஆசைகளை நிறைவேற்றும்


# வஜ்ரேஸ்வரி எந்திரம்

~ ஆஸ்ட்ரோவேட் ஜோதிடர் மு. செந்தில் நாதன்




மனிதனாய் பிறந்த அனைவரும் ஏதாவது ஒரு காலகட்டத்தில் தன்னம்பிக்கையை இழந்து நம்மால் சாதிக்க முடியுமா என்ற ஒரு நிலைக்கு தள்ளப்பட்டு இருப்போம். நாம் சந்திக்கும் முக்கியமான பிரச்சனைகளில் ஒன்று திருப்பி செலுத்த முடியாத கடனாக இருக்கலாம் அல்லது பாஸ் செய்ய முடியாத சார்ட்டட் அக்கவுன்டன்ட் தேர்வாக இருக்கலாம். இது போன்ற நமது நிராசை ஆகிகொண்டு இருக்கும் ஆசைகள் அனைத்தையும் நினைவாக்கும் ஆற்றல் வஜ்ரேஸ்வரி எனும் ஆறாம் திதியை ஆளக்கூடிய நித்திய தேவிக்கு உண்டு. வஜ்ரேஸ்வரி தேவி தமஸ குணத்தை உடைய ஐந்து நித்திய தேவிகளில் முதன்மையானவர் ஆவார். இவர் பஞ்சபூதங்களில் நெருப்பை ஆளக்கூடியவர். கிரகங்களில் சுக்கிரனை பிரதிபலிப்பவர் இந்த வஜ்ரேஸ்வரி ஆவார். சலனம் இல்லாமல் நிலைத்து இருக்கும் தன்மையை கொடுக்ககூடுயவர். ஜோதிடம் மற்றும் வாஸ்து போன்ற மறை பொருள் கலைகளுக்கும் காரண கர்த்தாவாக திகழ்பவள் இந்த வஜ்ரேஸ்வரி தேவியாவார். "வஜ்ரம்" என்றால் கடினமான, ஊடுருவ முடியாத "வைரம்" என்று பொருள். நம் மனதை வைரம் போன்று உறுதியாக்கி, நமது ஆசைகளை நிறைவேற்றும் குணம் உடையவள் இந்த வஜ்ரேஸ்வரி ஆவார். இத்தனை மாட்சி பொருந்திய வஜ்ரேஸ்வரி தேவியின் எந்திரத்தை பூஜை அறையில் கிழக்கு அல்லது வடக்கு நோக்கி வைத்து, சந்தன குங்கும திலகமிட்டு தினமும் செந்தாமரை மலர் கொண்டு பூஜித்து தீப தூப ஆராதனை காட்டி கீழே கொடுக்கப்பட்டிருக்கும் மந்திரத்தை 108 முறை கூறிவருவதால் நமது கனவுகளை ஆள்பவரும் மன உறுதியையும் தன்னம்பிக்கையையும் நமக்கு கொடுத்து, நமது ஆசைகள் அனைத்தையும் நிறைவேற்றுபவரும் இவரே.

ஸ்ரீ வஜ்ரேஷ்வரி காயத்ரி மந்திரம்:
ஓம் மஹா வஜ்ரேஸ்வர்யை வித்மஹே
வஜ்ர நித்யாயை தீமஹி
தன்னோ நித்யா ப்ரசோதயாத்.



மனிதன் தன் அமைப்பு முறையிலேயே சமய உணர்வு கொண்ட ஒரு பிராணியே. --- (மேல்நாட்டு அறிஞர்) எட்மண்ட் பர்க்



# திருவீழிமிழலை

~ ரா. பன்னீர் செல்வம்

திருவீழிமிழலை என்கிற இந்த திருத்தலம் திருவாரூர் மாவட்டம் பூந்தோட்டத்தையடுத்து அமைந்துள்ள அழகிய கிராமம். இத்தலத்தில் பல நூற்றாண்டுகள் கடந்தும், இறையருள் கொண்டதாய் விளங்குகின்றது வீழிநாதர் ஆலயம்!.



இத்தலம் பல்வேறு புராண சிறப்புகளை உள்ளடக்கியது. குறிப்பாக இறைவன் ஈசனுக்கும் பார்வதி தேவிக்கும் திருமணம் நடைபெற்ற தலம் இது என்பதற்கு ஓர் அருமையான புராண நிகழ்வு நடந்துள்ளது. அதாவது, கார்த்தியாயன முனிவர், தன் பத்தினியோடு பர்ணசாலை அமைத்து தங்கியிருந்தார். பல காலம் கடந்தும் இந்த ரிஷி தம்பதிகளுக்கு மழலை செல்வம் வாய்க்காமல் இருந்தது. மனம் தளராத கார்த்தியாயன முனிவர், கயிலை நாதனை வேண்டி, தன்மனக் குறையினை எடுத்துரைத்து, முழுமனதோடு பூஜைகள் செய்தார்.
அந்த பரம்பொருளின் கருணையால், ரிஷிபத்தினி கருவுற்று,ஓர் நன்னாளில் அழகிய பெண் குழந்தையை பெற்றெடுத்தார்.

சக்தியின் அம்சமாக அந்த குழந்தை அருளப்பட்டது என்பதை அறிந்த ரிஷிகள் பக்தியுடன் அந்த குழந்தையை வளர்த்து வந்தார்.

பருவ வயதை அடைந்த அந்த பார்வதிதேவியின் அம்சமான தன் மகளுக்கு பரமனே மணாளனாக அமைய வேண்டும் என்று ரிஷிகள் விருப்பம் கொண்டார்.

கார்த்தியாயனி என்னும் பெயரால் வளர்ந்து வந்த அந்தப் பெண்ணை இறைவன் மணந்து கொள்ள வேண்டும் என்ற காத்யாயன முனிவரின் விருப்பத்தை நிறைவேற்றும் வண்ணம் சிவபெருமான் இத்தலத்திற்கு வந்து கார்த்தியாயனியை கரம்பற்றியதாய் புராண நிகழ்வு கூறுகிறது.

இன்றும் இந்த ஆலயத்தில் இறைவன், இறைவியின் மணக்கோலம் கருவறையில் சிலா ரூபத்தில் அமைந்திருக்கும் தரிசனத்தை கண்டு மகிழலாம்.

இது தவிர....
ஒரு முறை அப்பரும் சம்பந்தரும் இத்தலத்து இறைவனை பூஜித்து இங்கேயே தங்கி இருந்த நேரத்தில் இந்தப் பகுதியில் கடுமையான பஞ்சம் ஏற்பட்டு மக்கள் பசியால் வாடினர்.

மக்களின் துயரங்களை கண்டு மனம் கலங்கிய அப்பரும் சம்பந்தரும் பாமர மக்களின் பசியினை ஆற்றும்படி பதிகங்கள் பாடி வேண்டிக்கொண்டனர்.

அன்றிரவு..... இருவரின் கனவிலும் தோன்றிய இறைவன், ',கிழக்கு மேற்கு பீடங்களில் படிக்காசு தினமும் கிடைக்க செய்வோம்.அதனைக்கொண்டு மக்களின் பசியாற்றி பஞ்சம் போக்குவீர் என அருளி மறைந்தார். அதன்படி....

கிழக்கு பீடத்தில் அப்பரும் மேற்கு பீடத்தில் சம்பந்தரும் படிக்காசினை பெற்று, மக்களின் பஞ்சத்தைப்போக்கியதாய் வரலாறு இயம்புகிறது.



‘வாசிதீரவே காசு நல்குவீர்’.... என்னும் பதிகம் வறுமையை நீக்கும் வல்லமை கொண்டது. என்பதனை அறிந்த சிவனடியார்கள் இப்போதும் அந்த பதிகத்தினை பாடிபயன் பெற்று வருகின்றனர்.

இன்னொரு சிறப்பும் இத்தலத்திற்கு உண்டு!
மகாவிஷ்ணுவுக்கு சக்கராயுதத்தை மீட்டுதந்த பெருமையையும் இத்தல இறைவனுக்கு உண்டு.

ஒரு முறை சலந்திரன் என்னும் அசுரன் மகாவிஷ்ணுவிடம் இருந்த சக்ராயுதத்தை பறித்துச் சென்று மறைந்துவிட்டான்.தன் சக்ராயுதத்தை மீட்டுத் தரும்படி மகாவிஷ்ணு, இந்த தலத்தில் உறையும் ஈசனை வேண்டி நிற்க, ஈசன், தினமும் தன்னை ஆயிரம் தாமரை மலர்கள் கொண்டு பூஜித்து வருமாறு கூற, விஷ்ணுவும் இங்கே தீர்த்தத்தை உருவாக்கி, சக்கர தீர்த்தத் நீரால் அபிஷேகம் செய்து தாமரை மலர்களால் அர்ச்சித்து வந்தார்.

அப்போது ஒரு நாள், பூஜைக்கு வைத்திருந்த தாமரை மலர்கள் இரண்டு குறைவதைக் கண்ட மகாவிஷ்ணு, பூஜை
தடைபடக்கூடாது என எண்ணி, தன் இரண்டு கண்களையும் தாமரை மலர்களாக நினைத்து அர்ச்சனை செய்யும் பொருட்டு கண்களை எடுக்க.... தடுத்து அருள் புரிந்த இறைவன்,உடனே சலந்திரனைக் கண்டு
போரில் வென்று, அவன் வசம் இருந்த சக்ராயுதத்தை மீட்டுக்கொண்டு
வந்து மகாவிஷ்ணுவிடம் ஒப்படைத்தார்.

மகாவிஷ்ணு உருவாக்கிய ‘விஷ்ணு தீர்த்தம்’ இன்றளவும் ஆலயத்தின் எதிரில் அமையப்பெற்று அழகுமிகு தோற்றத்துடன் விளங்குகின்றது.

மேலும் இவ்வாலயத்தில் வாரப்படிகள் என ஏழும் ராசிப்படிகல் என பன்னிரண்டும் நவகிரக படிகள் என ஒன்பதும் ஆங்காங்கே அமைந்திருப்பது சிறப்பு. அதோடு சிற்பக்கலையின் பெருமையினை உணர்த்தும் வகையில் இங்குள்ள ‘வவ்வால் நெற்றி மண்டபம்’ கட்டடக்கலைக்கு சிகரம் வைத்தாற்போல் விளங்குகின்றது.

# ஆன்மீக கேள்விகளும்? அர்த்தமுள்ள பதில்களும்...

~ ஆரூர். ஆர். சுப்பிரமணியன்

### வாய் உச்சரிப்புத் தவறால் தீமை விளைந்ததுண்டா?

தவறி உச்சரித்ததால் புராண காலத்தில் பல சம்பவங்கள் நிகழ்ந்ததுண்டு. அவற்றில் ஒன்றாக இதைக் குறிப்பிடலாம்.

ஒரு சந்தர்ப்பத்தில் பிரமதேவன் கும்பகர்ணனுக்கு காட்சி தந்து, "உனக்கு என்ன வரம் தேவை?" எனக் கேட்டபோது அவன் தன் அண்ணன் ராவணன் கோரிப் பெற்ற நித்யத்துவம் (சாகாவரம்) போல் தானும் கேட்க எண்ணிய போது, இந்த அரக்கன் அத்தகைய வரத்தைப் பெற்றால் உலகு தாங்காது என எண்ணிய சரஸ்வதி தேவி, கும்பகர்ணன் நாக்கை பிறழச் செய்து "நித்ரத்துவம்" என்ற வரத்தைக் கோரச்செய்து விட்டாள். அதன் பலனாக ஆண்டின் ஆறுமாத காலம் கும்பகர்ணன் தூங்கு மூஞ்சியாகி விட்டான்.

இன்றும் நம் சொல்வழக்கில் கும்பகர்ணனைப் போல தூங்குகிறான் என ஒப்பிடவும் அவன் வைத்து விட்டான்!

### இடுப்பில் வைத்து லிங்க பிரார்த்தனை எங்கே நடக்கிறது?

பவானி கூடுதுறையில் உள்ள சங்கமேஸ்வரர் திருக்கோயிலில் 'அமுதலிங்க"மாக சிவன் காட்சியளிக்கிறார். சிவலிங்கத்தை ஆவுடையார் பீடத்திலிருந்து சுலபமாக எடுக்கும் வகையில் உள்ளது.

மகப்பேறு அற்றவர்கள் இந்த சிவலிங்கத்தை தனியே எடுத்து இடுப்பில் சுமந்தபடி திருக்கோயிலை சுற்றி வந்தால் அவர்களுக்கு குழந்தை பிறக்கும் என்று ஐதீகம். அந்தப் பிரார்த்தனை இன்றும் தொடர்கிறது.

### ஆலயங்களில் உள்ள சிவனுக்கும், அவர் எதிரே இடம் பெற்றுள்ள நந்திக்கும் இடையே புகுந்து செல்லுதல் தவறாமே?

தவறு என்பது சரி.

கைலாயத்தில் பரமேஸ்வரன், உமா தேவியுடன் ஆனந்தமாக ஊஞ்சலில் அமர்ந்து ஆடிக் கொண்டிருப்பார். அந்த ஊஞ்சல் ஆடுவது எதனால் தெரியுமா?

அங்கிருக்கும் நந்தி தேவரின் மூச்சிலிருந்து வரும் காற்றே, இதமாக ஊஞ்சலை ஆட்டி வருகிறது.

இந்நிலை உள்ளதால்தான் ஆயலங்களில் அவர்களிடையே புகுதல் தவறாகிறது.

உலகை ஆட்டி வைக்கும் கைலயங்கிரி நாதனை, ஆடவைக்கும் சக்தி நந்தியிடமல்லவா உள்ளது!

அதனால்தான் பல ஆலயங்களில் குறுக்கீடுகளைத் தவிர்க்க சிவ - நந்தி மத்தியில் கயிறு கட்டியிருப்பார்கள் எச்சரிக்கும் முகமாய்.

### எஜமான விசுவாசம் உள்ள புராண புருஷர் யார்?

எத்தனையோ பேர்கள் இருந்தாலும் அவர்களில் தனித்து நிற்பவர் ஆஞ்சநேயரே!

சுக்ரீவன் கிஷ்கிந்தையை ஆட்சி புரிகையில், அவனுடைய அமைச்சராக இருந்த அனுமன், எப்போதும் அவனைவிட்டு பிரியாது அன்பு செலுத்தி வந்தார்.

வாலியின் கொடுமையால் தன் பதவி இழந்த சுக்ரீவன், காடு, மலைக்குகை என ஒளிந்து வாழ்ந்து வந்த போதும், அவனிடம் அதே அரச மரியாதையும், அன்பையும் காட்டினார் இந்த விசுவாசி.

தன் முன்னாள் அரசன் மீது கொண்ட பாசத்தால், மீண்டும் சுக்ரீவன் பழைய பதவியைப் பெற வேண்டும் என்ற எண்ணத்தால் அவன் ராமனுடன் நட்பு பூண பாலமானார் அனுமன்.

இதற்குப் பிறகு படிப்படியாய் வாயுப்புத்திரன் முழு அளவில் ராமனின் தீவிர பக்தன் ஆனாலும் தன் எஜமான விசுவாசத்தை கைவிடவில்லை!

### இன்பமடையும் வழி என்ன?

"இன்பம் பெற யோகம், தவம், யாகம் மேற்கொள்ள வேண்டியதில்லை. ஒவ்வொரு மனிதனும் காலந் தாழ்த்தாது எல்லா உயிர்களையும் தனது உயிரைப் போன்று பார்க்கும் மனநிலை கொண்டாலே, அது இன்ப மார்க்கத்தைக் காட்டி விடும்" என்பது வள்ளல் இராமலிங்க அடிகளாரின் வாக்கு.

## அது என்ன ‘பஜனை?‘

பஜனை என்னும் சொல்லுக்கு வேர்ச்சொல்லாகிறது. பஜித்தல் என்பது வழிபடுதல் என்று அதற்குப் பொருள். அந்த பஜனையில் ஈடுபடும் அத்தனை பக்தர்களின் ஐம்பொறிகளும், மனமும் வழிபாட்டில் ஒன்றுபடுகின்றன. வாய் தெய்வத்தினுடைய சீரைப் பாடுகிறது. கண் இறைவனையும், மெய்யடியார்களையும் பார்க்க, காது கடவுளுடைய அருட் புகழைக் கேட்கிறது. இதில் மூக்கின் பணி அங்கே எழும்பும் தெய்வீக மணத்தை நுகர்தல். பக்தி உணர்வு மேலிடவே, நமது மெய் சிலிர்க்க, மனமோ அந்த தெய்வத்தின் பெருமைகளை எண்ணி, எண்ணிப் பார்த்து உணர்ந்து, நெகிழ்ந்து பெறுவது பரவசநிலை! சாதாரண மக்களையும் ஆன்மீகத் துறையில் இழுப்பதற்கு பஜனை ஒரு சிறந்த சாதனமே.

“மரத்திலுள்ள பறவைகள் அதன் கீழிருந்து கை தட்டியவுடன் பறந்தோடி விடும். அவ்வாறே பஜனை செய்பவர்கள், பஜனை புரிகையில் கைதட்டும் போது, அவர்கள் கொண்ட பாவங்கள் அனைத்தும் பறந்தோடி விடுகின்றன” என்பது பகவான் இராமகிருஷ்ணர் அருளிய வாக்குகளில் ஒன்று.

## தியானத்தை குறிப்பாக நமது இந்துமதம் ஏன் கொண்டாடி வருகிறது?

ஒரு ஆத்மனிடத்து குவிக்கப்பட்ட அவன் மனம், அதன் பிறப்பிடமாகிய அந்த ஆத்மனிடத்து நிலைத்து நின்று விடுமாயின் அதுவே தியானமாகிறது. இடைவிடாத தாரணையே தியானம்!

அது என்ன தாரணை?

நம் மனோசக்தியை ஒன்று திரட்டி ஒரு புள்ளி அல்லது தெய்வத்திடம் குவியச் செய்தலே தாரணை. தியானத்திற்கு மனமே கருவி; ஆனால் தியான முடிவில் அம்மனம் அழிந்து விடுகிறது. தியானிக்கப்படுபவன், தியானிக்கப்படும் பொருள் மயமாக ஆகி விடுகிறான்.

இந்த தியானம் அகத்தைப் பற்றியது, பரத்தைப் பற்றியது என இருவகைப்படுகிறது. இகத்தைப் பற்றிய தியான உச்ச நிலையே அபரஞானம்!


தியானம் புரிவதால் மனித உடலும், மனமும், சுத்தி பெறுகிறது என்பது அனுபவசாலிகள் கண்ட உண்மைதான்!

## ஆத்ம குணங்கள் எவை?

தயை, பொறுமை, பொறாமையின்மை, நல்லவைகளில் உறுதி பூண்டிருத்தல், மனமகிழ்வு, பேராசையின்மை, கஞ்சத்தனமே இல்லாதிருத்தல், தூய்மை ஆகிய இந்த எட்டு குணங்களே ஆத்ம குணங்கள்.

## ராமபிரான் இராவணனைக் கொன்ற பிரம்மஹத்தி தோஷம் போக என்ன செய்தார்?

திருநாங்கூர் தலம் வந்த சீதாராமன் தங்கத்தால் உருவாக்கப்பட்ட பசுவை அந்தணருக்கு தானம் செய்து தனது பிரம்மஹத்தி தோஷத்தை நீக்கிக் கொண்டார்.

SWASASUGAM SYRUP
For Clearing Respiratory Tract
Call: 88702 88701

# பசு என்னும் பொக்கிஷம்!

~ பிரபு சங்கர்




பசுவிற்குள் எல்லா தெய்வங்களும் உறைவதாக, வேதங்களும், சாஸ்திரங்களும் உறுதியாகக் கூறுகின்றன. மகாலட்சுமியின் பூரண அம்சமும், உறைவிடமும் பசுதான். பசுவின் குளம்படி தூசுகள் பாவத்தையும் சேர்த்து பறக்கடிக்கும்.
“யாவர்க்குமாம் பசுவுக்கு ஒரு வாயுறை' என்று திருமூலர் வேண்டுகோள் விடுக்கிறார். பசுவின் திருமுகமே தெய்வீகத் தன்மை வாய்ந்தது. கண்களில் சூரிய, சந்திரரும், முன் உச்சியில் சிவபெருமானும் உறைகின்றனர்.
கோயிலில் சிவலிங்கத்திற்கு அபிஷேகம் செய்யும் புனிதநீரை, கருவறைக்கு வெளியே, பக்தர்கள் ஏந்தி உட்கொள்வதற்கும், தலையில் தெளித்துக்கொள்வதற்கும் கோமுகம் உதவுகிறது. பசுவின் முகம் (கோ முகம்) அத்தனை பவித்ரமானது என்பதை உணர்த்துவதற்குதான் இந்த ஏற்பாடு.
பார்வதி தேவியே பசு உருவில் திருவாவடுதுறை ஈசனை வழிபட்டு முக்தி பெற்றதால், அங்கே கோமுக்தீஸ்வரராக ஈசன் அருள்கிறார்.
கரூர் எனும் தலம் காமதேனுவால் பூசிக்கப்பட்டது. அதனாலேயே பசுபதீஸ்வரர் என்றும் ஆநிலையப்பர் எனவும் இங்குள்ள இறைவன் அழைக்கப்படுகிறார்.
கும்பகோணம்-திருப்பனந்தாள் தலத்திற்கு அருகேயுள்ள பந்தணைநல்லூரில், ஈசன் பசுபதீஸ்வரராக காட்சி தருகிறார்.
வசிஷ்டரின் சாபத்தைப் பெற்ற காமதேனு பூசித்த முக்கிய தலமாக, ‘ஆ'எனும் பசுவின் பெயராலேயே விளங்கும் தலம்தான் ஆவூர். இது தசரதர் வணங்கிய கோயிலும் ஆகும். வாஜபேயம் என்கிற யாகம் இங்கு வசிஷ்டரால் நிகழ்த்தப்பட்டது. இத்தலம் கும்பகோணத்திலிருந்து 10 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது.
இதேபோல திருவண்ணாமலைக்கும் விழுப்புரத்திற்குமிடையேயும் ஓர் ஆவூர் தலம் உள்ளது.
தஞ்சாவூர்-அய்யம்பேட்டைக்கு அருகேயுள்ள பசுபதி கோயிலில் இறைவன், பசுபதீஸ்வரர் எனப் போற்றபடுகிறார்.
தஞ்சைக்கு அருகேயுள்ள தென்குடித்திட்டை கோயில் இறைவனான பசுபதீஸ்வரர், காமதேனுவால் பூசிக்கப்பட்டதால் அப்பெயர் கொண்டார்.
மாடுகளை கட்டும் தொழுவத்துக்குப் பட்டி என்றும் பெயர். இதையொட்டியே நிறைய ஊர்களின் பெயர்களில் பட்டி என்று சேர்த்தார்கள்.
கும்பகோணத்திற்கு அருகிலுள்ள பட்டீஸ்வரத்தில் தேனுபுரீஸ்வரராக ஈசன் அருள்கிறார். இதுவும் காமதேனுவால் பூசிக்கப்பட்டதே.
கொங்கு நாட்டிலுள்ள பெரும்பாலான சிவாலயங்கள் காமதேனுவால் வணங்கப்பட்டவை. அவற்றில் முக்கியமாக, ஆதிபட்டீஸ்வரம் என்றழைக்கப்படும் பேரூர் தலத்தைச் சொல்லலாம். இங்குள்ள ஈசனின் பெயர், பட்டீஸ்வரர். கும்பகோணம் பட்டீஸ்வரத்திலிருந்து இதனைத் தனியே பிரித்துக் காட்ட, இத்தலத்தை ஆன்பட்டீஸ்வரம் எனவும் அழைத்தனர்.
தங்களை தற்காத்துக்கொள்ள, திரு ஆமாத்தூர் என்கிற திருவாமாத்தூரில் பசுக்கள் ஈசனை வழிபட்டு, கொம்பை பெற்றன.
விழுப்புரத்திற்கு அருகிலுள்ள இத்தலத்தை பசுக்களின் தாய்வீடு என்றே அழைப்பர்.
திருவாரூர், நன்னிலத்திற்கு அருகே கொண்டீச்சரம் அமைந்துள்ளது. பார்வதி தேவிக்கும், காமதேனுவின் மகளுக்கும் கொண்டி என்கிற பெயர் உண்டு. இந்த கொண்டியான அம்பிகை, பசுவடிவத்தில் சிவனை வணங்கியதால், இறைவன் பசுபதீஸ்வரர் ஆனார்.
தேனு என்று ஊரின் பெயரோ, ஈசனின் திருப்பெயரோ

இருந்தால், அவையெல்லாம் பசு பூஜித்த தலங்களாகும்.
மேல்மருவத்தூர்-அச்சிறுப்பாக்கத்திற்கு அருகே தேன்பாக்கத்தில் பசுபதீஸ்வரர் ஆலயம் உள்ளது.
அதேபோல கபிலா என்றும் பசுவிற்கு ஒரு பெயர் உண்டு. இப்படி கபிலையால் பூசிக்கப்பட்ட தலமாக, திருப்பதி மலையடிவாரத்தில் கபிலேஸ்வரர் ஆலயம் உள்ளது.
நெல்லை, சங்கரன் கோவிலில் அம்பிகை பசு வடிவில் தேவர்கள் சூழ ஈசனை வணங்கினாள். கோ எனும் பசுவாக தேவி வழிபட்டதால் கோமதி என்றே இன்றும் வணங்கப்படுகிறாள்.
கோமாதாவை வணங்கினால் கோடி புண்ணியம் கிடைக்கும். கோசாலை என்கிற பசுக் கொட்டிலின் அருகே சென்றாலேயே தெய்வீக அதிர்வுகளுக்கு நாம் ஆட்படுவது நிச்சயம். மனம் அமைதியாவதை உணர முடியும். அதனால்தான் பெரியோர்கள், கோசாலையில் அமர்ந்து நாம ஜபம் செய்வது, கோடி மடங்கு பலன் தரும் என்று சொல்லி வைத்தார்கள்.
எங்கே பசுவைப் பார்த்தாலும் மனதுக்குள் வணங்குவது, முறையாகப் பராமரிக்கப்பட்டுவரும் கோசாலைக்கு இயன்ற உதவிகளை அளிப்பதும் நம் வாழ்வில் வளம் சேர்க்கும் என்பது திண்ணம்.




KABA SURA
KUDINEER
15 herbs effective against Viral infections, fever, cough and breathing difficulties
Call: 88702 88701

# கண் கொடுத்த வனிதம்

~ ரா பன்னீர்செல்வம்



திருவாரூர் மாவட்டத்தில் கமலாபுரம் என்னும் ஊருக்கு அருகில் உள்ளது கண்கொடுத்தவனிதம் எனும் அழகிய சிற்றூர்.

இவ்வூரில் அமைந்துள்ளது, நயன வரதேஸ்வரர் ஆலயம்! இந்த இறைவன் செய்த லீலை தான் இந்த ஊருக்கு கண்கொடுத்த வனிதம் என்கிற பெயர் வர காரணமாய் அமைந்தது.

ஒரு பெண், ஒரு பெண் மகவை ஈன்றெடுத்தாள்.

அந்தப் பெண் குழந்தைக்கு இரண்டு கண்களிலும் பார்வை இல்லை! மிகுந்த வேதனையுடன் இருந்த அந்தப் பெண்,இத்தலத்து இறைவனான ஈசனிடம் தன் வேண்டுதலை தெரிவித்தாள்.தன் பெண் குழந்தைக்கு கண் பார்வை பழுதின்றி கிடைத்துவிட்டால் தன்னுடைய கண் இரண்டையும் எடுத்து இறைவனுக்கு காணிக்கையாக்குவதாக நேர்ந்து கொண்டு வழிபாடு செய்தாள்.

விரைவிலேயே அந்த குழந்தையின் கண்கள் ஒளி பெற்றது.மகிழ்ச்சியடைந்த அந்தப் பெண், தான் வேண்டிக் கொண்டபடி, இறைவனுக்கு தன் கண்களை காணிக்கையாய் செலுத்த முயன்றாள். அப்போது இறைவன் ஈசன், அவள் முன் தோன்றி அவளது பக்தியை மெச்சி அருள்புரிந்தார்.

தன் வேண்டுதல் நிறைவேறியதால் கண்களை கொடுக்க அந்தப் பெண் அதாவது வனிதை துணிந்ததால் அந்த ஊருக்கு கண்கொடுதவனிதம் என்கிற இனிய பெயர் உண்டானது!

அதேபோல, தன் பக்தையின் வேண்டுதல் படி அவளது குழந்தைக்கு கண் பார்வை கொடுத்த நாயகனான இறைவன் 'நயன வரதேஸ்வரர்' என்னும் திருநாமத்தை பெற்று இன்றளவும் அருள்பாலித்து வருகிறார்.

இப்போதுகூட, கண் பார்வை குறைபாடு உள்ளவர்கள் இந்த ஆலயத்திற்கு வந்து அர்ச்சனை செய்து, முழு மனதுடன் வேண்டிக்கொள்ள கண்களில் உள்ள குறைபாடுகள் நீங்கி விடும் என்பது இறைவன் நயன வரதேஸ்வரரின் கருணை என்றே பக்தர்களால் நம்பப்படுகிறது.

# இராஜ யோகம் அருளும் சிவன் கோயில்

~ சைவ சித்தாந்த செம்மல்
கவிஞர் சீனு செந்தாமரை
கடலூர்.





இராஜ யோகம் அருளும் திருநாங்கூர் அருள்மிகு மதங்கீஸ்வரர் அருள்மிகு ஸ்ரீ ராஜ மாதங்கி திருத்தலம் சீர்காழியிலிருந்து 10 கிலோமீட்டர் தொலைவில் அமைந்துள்ளது. மயிலாடுதுறை நகரிலிருந்து இத்திருத்தலத்திற்கு பேருந்து வசதி உண்டு.

இத்தல இறைவனின் பெயர் ஸ்ரீ மதங்கீஸ்வரர் இறைவி பெயர் ஸ்ரீ ராஜமாதங்கி அம்பிகை. தல விருட்சம் வன்னி மரம். தல சிறப்புகள் நிறைய உள்ளன.

ஒரே பீடத்தில் அமைந்துள்ள இரு நந்திகள் இரு வேறு திசைகளை நோக்கி வீற்றிருக்கின்றன. ஒன்று திருவெண்காட்டை நோக்கியும், மற்றொன்று ஸ்ரீ மதங்கீஸ்வரர் சன்னிதியை நோக்கியும் அருட் காட்சி அளிக்கின்றன.

வருடந்தோறும் 12 சிவ மூர்த்திகளும் அம்பிகையுடன் 12 ரிஷப வாகனங்களில் எழுந்தருளி ஸ்ரீ மதங்க மகரிஷிக்கு திருக்கல்யாண காட்சி கொடுத்த வைபவம் இனிதே நடைபெறுகிறது. திருநாங்கூரை பராசவனம் என இத்திருத்தலத்தை குறிப்பதாக தலபுராணம் வாயிலாக அறியலாம். மாதவம் புரிந்த மதங்க மகரிஷியின் வேண்டுதல் படி, திருமால் பன்னிரு மூர்த்திகளாக எழுந்தருளி பராசவனம் எனும் திருநாங்கூரில் பல்வேறு பகுதிகளில் எழுந்தருள்வித்து சர்வேஸ்வரனை வழிபட்டதாக பராசவன புராணம் கூறுகின்றது.

நமச்சிவாய வாழ்க! நாதன் தாள் வாழ்க!
இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க!

என்று மணிவாசகப் பெருமான் சிவபுராணத்தில் அருளியது போன்று சங்க இலக்கியங்களான பட்டினப் பாலை, பொருநர் ஆற்றுப்படை நூல்களில் இத்தல குறிப்புகள் காணப் பெறுகின்றன. சிலப்பதிகாரம் உள்ளிட்ட பழந்தமிழ் நூல்களில் நாங்கூர் வேளிர் என்ற குறுநில மன்னர் மகளை கரிகாற்சோழன் திருமணம் செய்து கொண்டதாய் குறிப்பு காணப்படுகிறது. எனவே கரிகாற் சோழனின் மனைவி நாங்கூரைச் சேர்ந்தவர் என்பது தெளிவு ஆகிறது.

சிதம்பரம் ஸ்ரீ நடராஜ பெருமான் திருவருள் குறித்து தம் பதிமூன்று பாடல்களில் சேந்தனார் திருப்பல்லாண்டு பாடியுள்ளார்.

“மன்னுக தில்லை வளர்க நம்
பக்தர்கள் வஞ்சகர் போய் அகல
பொன்னின் செய் மண்டபத்துள்ளே புகுந்து
புவனி எல்லாம் விளங்க
அன்னநடை மடவாள் உமைகோன்
அடியோமுக்கு அருள் புரிந்து
பின்னைப் பிறவி யறுக்க நெறிதந்த
பித்தற்கு பல்லாண்டு கூறுதுமே”

என்று தில்லை அம்பல நடராஜ பெருமானை சேந்தனார் உள்ளமுருக பாடி உள்ளார். திருவீழி மிழலை ஈசன் குறித்தும் சேந்தனார் திருவிசைப்பாடி அருளியுள்ளார். இத்தகைய அருள் நலம் மிக்க சேந்தனார் திருநாங்கூரை சேர்ந்தவர்.

மதங்க மகரிஷியின் மகன் மாதங்கர் இவருக்கு பிரம்ம வித்தை என்ற பெயரில் உமையம்பிகை இத்தல ஈஸ்வரியாம் அருள்மிகு அஞ்சனாட்சியே அருமை மகளாக அவதரித்து, அருகே உள்ள திருவெண்காட்டில் உள்ள ஸ்ரீ சுவேதாரண்யேஸ்வரரை மணந்ததாக பராசவனப் புராணம் வாயிலாக அறியலாம்.



இக்கோயில் அனைத்துமே கிழக்குத் திசை நோக்கி அமைந்துள்ளது. கோயில் கருவறையில் ஸ்ரீ மதங்கீஸ்வரர் கம்பீரமாக அருட் காட்சி அளிக்கின்றார். அருகே கிழக்கு பகுதியில் இடப்பக்கத்தில் ஸ்ரீ மாதங்கி சன்னிதி அழகாக அமைந்துள்ளது.

தென் திசை நோக்கி காளி சந்நிதியும், மதங்க மகரிஷியின் சன்னிதியும், எழிலுற அருட் காட்சி அளிக்கின்றது. தண்வயற்சூழ் திருப்பெருந்துறை என்று மாணிக்கவாசகர் திருப்பள்ளி எழுச்சியில் அருளியிருப்பார். அவர்தம் அருள்வாக்கிற்கேற்ப திருநாங்கூர் திருத்தலமும் தண்வயல் சூழ அமைந்துள்ளது மிகவும் சிறப்பு!

தென்மேற்கு மூலையில் ஸ்ரீ விநாயகர் சந்நிதி அழகாக அமைந்துள்ளது. இச்சந்நிதி எல்லோரது மனதிலும் மகிழ்ச்சியும், அமைதியும் ஏற்படுத்தும் அதிசயத்தை உணரலாம். இத்தலத்தில் முற்கால சோழர்கள் கட்டிய கருவறை விமானம் அழகுற அமைந்துள்ளது.

"கறந்த பால் கன்னலொடு, நெய் கலந்தாற்போல
சிறந்த அடியார் சிந்தனையுள் தேன்ஊறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்"

இங்கே அற்புதமாக அருள் பாலிக்கின்றார். ஈசன் அடிபோற்றி எந்தை அடிபோற்றி தேசன் அடிபோற்றி சிவன் சேவடி போற்றி நேயத்தே நின்ற நிமலன் அடி போற்றி மாயப் பிறப்பு அறுக்கும் மன்னன் அடி போற்றி

சீரார் பெருந்துறை நம் தேவன் அடி போற்றி என்றும் இத்தல ஈசனை மனமுருக வழிபடலாம்.

சோழர்கால சிற்பங்கள் இத்தலத்தில் மிகவும் கம்பீரமாக உள்ளன. நாராயணி சிற்பம் இத்தளத்தில் அமைந்து உள்ளது மிகவும் விசேஷம்.

கி.பி. பதினாறாம் நூற்றாண்டைச் சேர்ந்த நவக்கிரக சிற்பங்கள் இத்தல திருச்சுற்றின் மகா மண்டபத்தில் வடக்குப் புறத்தில் மிகச் சிறப்பாக அமைந்துள்ளது.

ஸ்ரீ முருகப் பெருமான், ஸ்ரீ பைரவர் ஸ்ரீ சூரிய பகவான் சிற்பங்கள் கி.பி. 12,13 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவை என்பது குறிப்பிடத்தக்கது. காலத்தால் மிகவும் பழமை மிக்க இந்த ஆலயத்தை, கவனிப்பாரற்று உள்ளே செல்ல முடியாத அளவிற்கு முட்புதர் சூழ்ந்த இத்தகைய பழம்பெரும் கோயிலை அப்படியே விட்டு விடாமல், அவ்வப்போது கோயில் திருப்பணி மற்றும் உழவாரப் பணிகள் செய்தும், அடிக்கடி சிவ விசேஷங்கள்- அபிஷேக, அலங்காரங்கள் என சளைக்காமல் செய்தும், பழைய கம்பீரத்தை மீண்டும் ஈசன் அருளால் ஏற்படுத்திய பெருமை கடலூர் ஸ்ரீ காமாட்சி அம்மன் ஆலய அர்ச்சகரும் திரு நாங்கூரைச் சேர்ந்த சிவநேயச் செல்வருமான ஸ்ரீ நடராஜ சிவம் சுவாமிகளின் பெரு முயற்சியால் இத்தலம் தற்போது மிகுந்த பொலிவுடன் உள்ளது. கி.பி. 9ம் நூற்றாண்டில் தவ வாழ்வு வாழ்ந்த சுந்தரமூர்த்தி சுவாமிகள் அற்புதமான இத்தல ஈசனை உள்ளம் உருக வழிபட்டு, தம் இரு பதிகங்களில் திருநாங்கூரை அழகாகக் குறிப்பிடுகின்றார்.

பிரதி வருடந்தோறும் 12 சிவ மூர்த்திகளும் அம்பிகையுடன் 12 ரிஷப வாகனங்களில் எழுந்தருளி ஸ்ரீ மதங்க மகரிஷிக்கு திருக்கல்யாண காட்சி தந்த வைபவம் நீண்ட காலமாக நடைபெறாமல் இருந்தது. மீண்டும் இந்த வைபவம் ஸ்ரீ நாகராஜ சிவம் சுவாமிகளால் அற்புதமாக நடைபெற்று வருகிறது.

இத்தல ஈசனையும், அம்பிகையையும் மனதார வழிபட்டால் வாஞ்சையுடன் அருள்பாலிப்பார்கள். திருமணத் தடை விலகவும் குழந்தை பாக்கியம் ஏற்படவும், பட்டம், பதவி புகழ், நீண்ட ஆயுள்- நிறைந்த செல்வம் மட்டுமல்லாது இராஜ யோகம் கிடைக்கும் என்பது பழந்தமிழ்ப் பாடல்களில் அறியப் பெறும் செய்தியாகும். நாமும் தரிசிப்போம். நலமெல்லாம் பெறுவோம்.

# சிந்தனை குறித்து சிந்தனையாளர்கள் வெளிப்பாடு!

~ நாராயணி

உத்தம சிந்தனைகள், எல்லாப் பக்கங்களிலிருந்தும், நமக்கு வந்து சேரப்படும்.
- ரிக் வேதம்

நம் பலவீனத்தைப் போக்கும் வழி சுலபமான ஒன்று-
நமது பலவீனம் பற்றியே எண்ணிக் கவலைப் படாது, தன் பலத்தைப் பற்றி சிந்திப்பதே அது.
- சுவாமி விவேகானந்தர்

சிந்தனை, சொல், செயல் மூன்றும், இனிதே, இணைந்திருப்பதையே குறிக்கோளாகக் கொள்.
- மகாத்மா காந்தி

சுயமாக சிந்தனை செய்; மற்றவர்கள் மூலம் ஒரு போதும் சிந்தனை செய்யாதே!
இந்திய மகான் ஸரதுஸ்திரர்

வாழ்வில் ஒருமுறை கூட செயலாற்றா விடில், லட்சம் தடவை நீ சிந்தனை செய்து எவ்வித பயனுமில்லை! அலைந்து திரிந்து செல்லும் உன் மனதைத் தடுத்து நிறுத்தாவிடில், ஓயாமல் மௌனம் மேற்கொள்வதால், பயனே கிடையாது. ரொட்டியை உனது வயிற்றின் மேல் அடுக்கி கட்டி விடுவதால் மட்டும், பசியை அடக்கிவிட முடியாது!
- சீக்கிய குரு, குருநானக்

சிந்தனைகள் மீது, வரி செலுத்த வேண்டியதில்லை!
(மேனாட்டு அறிஞன்) - மார்ட்டின் லூதர்

சிந்தனை செய்வோர்க்கு உலகம் ஒரு இன்பவியல் நாடகம்; உணர்ச்சிக் கொண்டவர்க்கு துன்பவியல் நாடகம்.
(மேனாட்டு அறிஞன்) - ஹோரஸ் வால்போல்

ஆன்மா, தன்னுடன் தானே உரையாடிக் கொள்வதற்குப் பேரே சிந்தனை.
(மேனாட்டு அறிஞன்) - பிளேட்டோ

கலகலப்பாய் இல்லாதவர்கள், சிந்தனையில் ஆழ்ந்த அமைப்பு பெற்றவர்கள் போல் பாவனை செய்து, “கனமான மனிதர்கள்“ என்று பெயர் பெற்று விடுகிறார்கள்.
(மேனாட்டு அறிஞன்) - ஜான் ட்ரைடன்

சிந்தனையில் ஆழ்ந்த பாவணைத் தோற்றம், உள்ளத்தை மறைக்க உடம்பு காட்டும் விவேகம்.
(மேனாட்டு அறிஞன்) - எட்வர்ட் யங்

மற்றவர்கள் சிந்திப்பதாக எண்ணிக்கொள்ள நீங்கள் உதவி புரிந்தால், அவர்களுக்கு உங்களைப் பிடித்துப் போய்விடும்.
அவர்களை உண்மையாகவே சிந்தனை செய்ய நீங்கள் தூண்டிவிட்டால், அவர்களுக்கு உங்களை பிடிக்கவே பிடிக்காது.
(மேனாட்டு அறிஞன்) - டான் மார்க்வீஸ்

# ஆன்மீக அறநெறி உணர்த்தும் அற்புத நிகழ்வுகள்....

~ சைவ சித்தாந்த செம்மல்
கவிஞர் சீனு செந்தாமரை
கடலூர்.

ஆசை எனும் திரை விலகினால் சிவஜோதி நம் உள்ளத்தில் தெரியும்! இறைவன் அருளே உலகில் பெரிது! மற்றதை வெறும் தூசு! மாசு நிறைந்த மனதை எந்த மனிதனும் விரும்பாத போது இறைவன் எப்படி ஏற்பான்?

அன்பான உள்ளத்தை அனைவரும் விரும்புவர் ஆண்டவன் அருளைப்பெற அன்பே சிறந்த வழி!
ஆதியும் அந்தமும் இல்லா காண்பதற்கு இயலாத ஜோதிமயமானவனை ஆன்மநேய ஒருமைப்பாட்டு உணர்வுடன் வழிபடும்போது நமக்கு அருளை விழைவோடு ஈசன் மகிழ்வான்!

சகலமும் சிவார்ப்பணம் என்ற எண்ணமே சிவஞானம்! வானில் உள்ள நட்சத்திரங்களைக் கூட எண்ணிவிடலாம் இறைவனின் அருள் தன்மையை எண்ண இயலாது. நீர்க்குமிழியாய், மின்னலாய் தோன்றி மறையும் உலக வாழ்வு உணர்த்தும் உன்னத செய்தியை உணர்ந்தும் தெளிவில்லாது வாழ்வது தவறு அல்லவா?
கல்லாக கருதுபவன் கல்லாகவே இருப்பான் கடவுளாக கருதுபவன் கடவுளையே அடைவான்.

கோயிலை கட்டுபவனாக இருக்கலாம் சிலைகளைச் செதுக்கி இருக்கலாம் அனைத்து பணிகளையும் நாம் செய்து இருக்கலாம் மனித இனத்தை மட்டும் அல்ல அனைத்து உயிரினங்களையும் காப்பது ஈசனின் கருணை அல்லவா?

எது நம்மால் முடியும் அதுவும் நம்மால் முடியாது. அவனருள் இருந்தால் மட்டுமே சாத்தியமாகும் இதுவே சத்யமாகும்.

விஷத்தை விஷமாக்கத்தான் மனிதனால்



முடியும் விஷத்தை அமுதாக்கும் வித்தை ஈசனால் மட்டுமே முடியும். தன் வாழ்நாளில் தன் ஆணவத்தை அம்பலப்படுத்த ஆசையுள்ள மனிதனுக்கு மருந்துமில்லை! மந்திரமும் இல்லை. செல்வத்தை காப்பது போல அடக்கத்தை காக்க வேண்டும். மாறிமாறி பாவங்களை செய்து கொண்டே இருந்தால் மலப்புழுவாக தான் பிறக்க நேரிடும்!
ஒரு சில நாட்கள் மட்டுமே ஜீவிக்கும் வாசமலர்கள் மற்றவர்களுக்காக வாழ்கின்றன...!

மனித இனமாகிய நாமோ நம்மை மட்டுமே சிந்திக்கின்றோம். அந்த சின்ன மலர்களை இறைவனே ஏற்கின்றான். காமத்தையும், குரோதத்தையும், அகங்காரத்தையும், அலட்சிய புத்தியையும் கொண்டிருப்பவர்களை அவர்களை சேர்ந்தவர்கள் கூட அருகில் சேர்க்க

அனுமதிப்பதில்லை அப்படியிருக்கும் போது இறைவன் எப்படி ஏற்பார்?

துளிக்கூட கர்வம் கொள்ளக்கூடாது எவரையும் நிந்திக்கவோ எவர் மனதையும் புண்படுத்தவோ கூடவே கூடாது. அது மிகப் பெரிய பாவம். பகைவனுக்கு அருள்வாய் நன்னெஞ்சே என்றார் மகாகவி பாரதி.

கோயிலில் சுவாமி தரிசனம் செய்யும்போது தமக்குத் துன்பம் இழைப்போரை தண்டிக்க சொல்வது மிகவும் தவறு.

துன்பம் இழைப்போரிடமிருந்து நம்மை காப்பாற்ற இறைவனை வேண்டலாம்.
எந்த வணிகராவது தன்னுடைய சரக்கின் கெடுதியை கூறுவாரா? எந்த கொடையாளியாவது புகழை விரும்பாமல் இருப்பாரா? மாற்றை குறைத்து கூறாமல் பொன் வாங்கும் வாணிபன் உண்டா? எவ்வித பிரதிபலனும் எதிர்பார்க்காது உதவுபவர்கள் உண்டா? தனக்கு வழங்கப்பட்ட தண்டனையை நியாயம் என்று ஒப்புக்கொள்ளும் குற்றவாளி உலகில் உண்டா? மேற்கண்ட வினாக்களுக்குரிய விடைகளாக நல்லவர்களும் இருக்கத்தான் செய்கின்றனர். அவர்களால் தான் உலகம் இன்றளவும் நிலைபெறுகிறது.

தவம் என்றால் மகரிஷிகளாக காட்டிற்கு போயோ - இமயமலைச் சாரலிலோ போய் காவி உடுத்தி - உருத்திராட்சம் தரித்து மொட்டையடித்தோ - ஜடாமுடி தரித்தோ இருக்க வேண்டியதில்லை.
நாம் வீட்டிலோ- பணிபுரியும் அலுவலகத்திலோ கடைகளிலோ- எத்தொழில் செய்தாலும் குடும்பத்தில் இருந்து கொண்டே தவம் புரியலாம். சர்வேஸ்வரனின் மூல மந்திரமாகிய ஓம் நமச்சிவாய என்ற மகா மந்திரத்தை மனம் மொழி மெய் ஒன்றுபட உச்சரித்தாலே போதும்.
துறவிக்கு வேந்தனும் துரும்பு என்பார்கள்.

பட்டினத்தடிகள் மிகப்பெரிய செல்வந்தராக வாழ்ந்தவர். அவர் ஒருநாள் செல்வத்தை எல்லாம் விட்டுவிட்டு காட்டிற்கு கடுந்தவம் செய்ய சென்றுவிட்டார். இதனை அறிந்த வேந்தரும் அணிதேர் புரவி ஆட்பெரும் படையுடன் அங்கு சென்றான். பட்டினத்தாரோ நிட்டையில் இருந்தார். சிறிது நேரம் சென்ற பிறகு அவர் கண் விழித்து அரசனை நோக்கி எங்கு வந்தீர் என கேட்டார். அரசருக்கு ஒப்பான செல்வத்திலே திளைத்திருக்க வேண்டிய நீங்கள் ஏன் துறவு மேற்கொண்டு விட்டீர்கள். இதனால் நீங்கள் கண்டதென்ன என்று மாமன்னன் கேட்க, நீர் நிற்கவும் நான் இருக்கவும் கண்டேன். எனக் கூறினார் பட்டினத்தார்.

அப்போதுதான் அரசனுக்குத் துறவியின் பெருமை தெரிந்தது. யாம் யார்க்கும் குடியல்லோம் என்று இருமாந்து கூறும் உயரிய குரலை அங்கேதான் அவ்வேந்தன் கேட்டான். பெறுவதற்கு அரிய செல்வமான பெருஞ் செல்வத்தை பெற்றும் அவர்களே பெரியவர்கள் என்பதை அவ்வரசன் உணர்ந்து பட்டினத்தார் கால்களில் விழுந்து வணங்கினான் என்பது புராணச் செய்தியாகும்.

முள் நிறைந்த செடியில் தான் நல்ல மனமும் பேரழகும் கொண்ட ரோஜா மலர்கள் மலர்கிறது. அதுபோல சொல்ல முடியாத துன்பத்திற்கும், எதிர்ப்புகள் மத்தியில் தான் உண்மை மலர்கிறது.
அவன்தான் தீமை செய்கின்றான் என்றால் அதே தீமையை நாமும் ஏன் செய்ய வேண்டும்? தெய்வீக நிலைக்கு உயர பகைவர்கள் மீதும் அன்பு செலுத்த வேண்டும். கொட்டுவது தேளின் குணம் மன்னிப்பது தெய்வ குணம்.
கொத்த வரும் பாம்பைக் கூட பாசமாக பார்ப்பது பிள்ளை குணமல்லவா? அதனால்தான் குழந்தையும் தெய்வமும் ஒன்று என்கிறார்கள்.
"ஒருமையுடன் நினது திரு மலரடி நினைக்கின்ற உத்தமர் தம் உறவு வேண்டும் என்று ஈசனிடம் வேண்டுகின்றார் வள்ளல் பெருமான்.
"உத்தமன் ஆகுக" என்பது திருவருட்பிரகாச வள்ளலார் அருளிடும் அன்பு கட்டளை! மனமதை செம்மையாக்கும் வாழ்வை வளமையாக்குவோம்.

# ஹோலி என்னும் வண்ண விழா

~ சோழ தாசன்

ஹோலி பண்டிகை என்பது வட நாட்டில், குறிப்பாக குஜராத் போன்ற மாநிலங்களில் கொண்டாடப்படும் விழாவாக இருந்தாலும் இன்று இந்தியத் திருநாடு முழுமையும் கொண்டாடப்பட்டு வருகிறது.


பனிக்காலம் குறைந்து இளவேனிற்காலம் தொடங்கும் நேரத்தில் சூரியனின் கிரணங்களை வரவேற்கும் விதமாக பங்குனி மாத பவுர்ணமி அன்று கொண்டாடப்படும் வண்ணமயமான விழாவே இந்த ஹோலிப் பண்டிகையாகும்.

வண்ணப் பொடிகளை ஒருவர் மீது ஒருவர் தூவியும் பூசியும் நீரில் கலந்த வண்ணப் பொடிகளை குழாயில் அடைத்து பீச்சியடித்தும் அனைவரும் மகிழ்ச்சிக் கடலில் நீந்தும் ஒரு மகத்தான விழா என்றால் அது ஹோலிப்பண்டிகை தான்!

உறவினர், நண்பர்கள், தெரிந்தவர், தெரியாதவர் என எந்த பாகுபாடும் இல்லாமல் எதிர்ப்படும் அனைவர் மீதும் வண்ணக் கலவையை வாரியிறைக்கும் வசந்தத்தின் வாசலாக இந்த பண்டிகை கொண்டாடப்படுகிறது.

இப்படி வண்ணப் பொடிகளை மற்றவர் மீது பூசுகின்ற போது எவரும் கோபம் கொள்ளாமல், தங்கள் ஆடை அலங்கோலமானாலும் பொறுத்துக்கொண்டு சகிப்புத் தன்மையோடு சிரித்தபடி ஏற்றுக் கொள்வது இந்தப் பண்டிகையின் சிறப்பம்சமாகும்!

## பிரகலாதன் வரலாறு



இன்று இது ஒரு கலாச்சார விழாவாக கொண்டாடப்பட்டாலும் இதற்குப் பின்னால் ஒரு பக்தி மயமான புராண நிகழ்வும் பின்னிப்பிணைந்துள்ளது.

அரக்கனான இரண்யன் தன்னையே கடவுளாக பிரகடனப்படுத்திக் கொண்டு, அனைவரும் தன்னையே கடவுளாய் வணங்கி, “ ஓம் இரண்யாய நமஹ“ என வழிபட வேண்டும் என்று கட்டளை பிறப்பித்தான்.

அனைவரும் அதனை ஏற்றுக்கொண்ட நிலையில்....

இரண்யனின் மகனான பிரகலாதன் அதனை ஏற்கவில்லை, கருவிலேயே திருவினைப் பெற்று நாராயணன் நாமமே நன்மை பயக்கும் எனத் தெளிந்த அறிவுடன் திகழ்ந்த அந்த ஞானக் குழந்தையான பிரகலாதன் “ஓம் நாராயணாய நமஹ”, எனும் நாமத்தை சொல்லி நாராயணனையே துதித்த காரணத்தால் தந்தை இரண்யனின் எதிரியானான்.

தன் மகனாக இருந்தாலும் தன்னை கடவுளாக ஏற்க மறுத்த பிரகலாதனை கொல்வதற்கு எத்தனையோ வழிகளில் பலமுறை முயன்றான் இரணியன்!

பெற்ற மகனை தந்தையே கொல்லத் துணிந்த வினோதம் அரங்கேறினாலும் அத்தனை இன்னல்களிலிருந்தும் நாராயண பக்தி பிரகலாதனைக் காத்தருளியது.

பிரகலாதனின் பிஞ்சு நெஞ்சில் பழுத்த கனியாக பக்தி கனிந்து இருந்ததை பகவான் நாராயணன் பெருமைப் படுத்தவே அந்த இளம் பக்தனுக்கு துணையாய் இருந்து பாதுகாத்தார்.

இரணியன் மேலும் ஒரு முயற்சியில் ஈடுபட்டான்.

இரணியனின் தங்கையான அரக்கி ஹோலிகா என்பவள் நெருப்பில் எரியாத தன்மை பெற்றவள். எனவே, பெருந்தீயை மூட்டி, அந்த தீயிலே ஹோலிகாவை அமரச்செய்து, அவளது மடியில் பிரகலாதனை உட்காரவைத்தால், அந்தப் பெருந்தீயானது பிரகலாதனை எரித்துவிடும்", ஹோலிகா எந்த பாதிப்பும் இன்றி மீள்வாள் என எண்ணி அதற்கான ஏற்பாடுகளை செய்தான்.

அந்த நாளும் வந்தது!

தீ மூட்டப்பட்டது, ஹோலிகா தீயில் இறங்கி அமர, அவளிடம் பிரகலாதனை தூக்கி வீசினார்கள். என்ன அதிசயம்!! நாராயணனின் மகிமை அங்கே அரங்கேறியது! தன்னை தீயால் தீண்ட முடியாது என்னும் தன்மை பெற்றிருந்த அரக்கி ஹோலிகா, பிரகலாதன் அவள் கரங்களில் பட்ட அந்த வேளையிலேயே தீயில் வெந்து மடிந்தாள்.

நாராயணன் தன் பக்தனான பிரகலாதனை தீ தீண்டாவண்ணம் காத்தருளினார்.

தீயில் வெந்து மாண்டுபோன ஹோலிகாவின் அழிவைக் கொண்டாடும் விதமாக தான், மக்கள் வண்ணப் பொடிகளைத் தூவி, "ஹோலி, ஹோலி" என ஆர்ப்பரித்துக் கொண்டாடுகின்றனர்.

தீமை அழிந்து, நன்மை பெருகும் விதமாக இந்த பண்டிகை கொண்டாடப்படுகிறது.


இது தவிர, கிருஷ்ண அவதாரத்தினை பகவான் மகாவிஷ்ணு எடுத்த போது கிருஷ்ணரும் ராதையும் மகிழ்ந்து கொண்டாடிய விழா இது எனவும் பல பகுதிகளில் கொண்டாடப்படுகிறது.

மேலும், சிவபெருமானின் நெற்றிக் கண்ணால் தீக்கிரையான மன்மதனை அவனது மனைவி ரதிதேவி, மீண்டும் உயிர்ப்பித்துத் தர வேண்டும் என்று சிவனிடம் கேட்டுக் கொண்டதற்கிணங்க,

"உன் கணவன் உன் கண்களை தவிர, வேறு யார் கண்களுக்கும் தெரிய மாட்டான்", என்கிற நிபந்தனையோடு மன்மதனை இறைவன் உயிர்ப்பித்து தந்தார்.

அப்படி மன்மதன் உயிர் மீண்ட நாளே வசந்த விழா எனும் ஹோலிப் பண்டிகையாகக் கொண்டாடப்படுகிறது.

மக்கள் அனைவரும் நல்லிணக்கம், சகோதரத்துவம், சகிப்புத்தன்மை எனும் நற்பண்புகளை ஊக்குவிக்கும் இந்தப் பண்டிகையை கொண்டாடி மகிழ்வோம்!



# சாவித்திரி விரதம்

~ ஆர். பரஞ்சோதி

ஆண்டுதோறும் மாசியும் பங்குனியும் சங்கமிக்கும் வேளையில் சுமங்கலிப்பெண்கள், தங்களின் மாங்கல்ய பலத்திற்காக நடத்தப்படுவதே காரடையான் நோன்பு.

இதனை காமாட்சி நோன்பு, கௌரி நோன்பு என்றும் சொல்வார்கள். ஆனால் இவற்றை விட பொருத்தமான பெயர் சாவித்திரி விரதம் என்பது தான்!

இந்தப் பெயர் வந்ததற்கும் இந்த நோன்பை சுமங்கலிப் பெண்கள் கடைப்பிடித்து வருவதற்கும் ஓர் புராண நிகழ்வு காரணமாகிறது.

## மன்னன் மகள்

மந்திர தேசத்தை ஆண்டு வந்த மன்னனான அசுவபதிக்கு ஆண் வாரிசு கிடையாது! எனது, தனது ஒரே மகளான சாவித்திரியை கலையறிவும் கல்வியறிவும் கொண்ட பெண்ணாக வளர்த்து வந்தான். சாவித்திரியும் சகல கலைகளிலும் தேர்ச்சியுற்று தைரியமிக்க பெண்ணாக விளங்கினாள்.

ஒரு முறை.... அருகிலுள்ள காட்டிற்கு வேட்டையாட சென்றாள், வீரப்பெண் சாவித்திரி!

அங்கு ஒரு வாலிபன், அழகும் அறிவு ஒளி வீசும் தேகத்துடனும் தியானம் செய்வதைக் கண்டாள்.

அந்த இளைஞன்... அருகிலே இருந்த சாளுவ தேச இளவரசன் சத்தியவான் என்பதை சாவித்திரி அறிந்திருக்கவில்லை.

இவனது தந்தை போரிலே நாட்டை இழந்து இந்த காட்டில் வசித்து வந்தார். மன்னருக்கும் அவரது மனைவிக்கும் கண்பார்வை தெரியாததால் பெற்றோர் இருவரையும் சத்தியவான், அன்போடும் ஆதரவோடும் கவனித்து சேவை செய்து வந்தான்.

பார்வையற்ற பெற்றோரின்பால் சத்தியவான் காட்டும் பரிவும் பக்தியும் சாவித்திரியின் மனதில் ஒரு இனம் புரியாத ஈர்ப்பை ஏற்படுத்தியது.

எனவே சத்தியவானையே கணவனாக அடைய வேண்டும் என முடிவு செய்தாள்.

தன் விருப்பத்தை தந்தை அசுவபதியிடம் தெரிவித்தாள். மகளின் விருப்பத்திற்கு தடை சொல்ல விரும்பாத மன்னனும் சத்தியவான்- சாவித்திரி திருமணத்திற்கு சம்மதித்தார்.

தனது விருப்பம் நிறைவேறப் போகிறது என சாவித்திரி மகிழ்ந்திருந்த வேளையில்....

மன்னன் அசுவபதியை சந்திக்கும் நாரத மகரிஷி, “இன்னும் ஓராண்டுக் காலமே சத்தியவான் வாழ்வான்; அவன் ஆயுள் முடியப் போகிறது; எனவே உங்கள் மகளை மணம் செய்து கொடுக்க வேண்டாம்”, என எச்சரித்து சென்றுவிட்டார்.

இந்த விபரத்தை மகளிடம் மன்னன் சொல்ல, சாவித்திரி அதனை ஏற்காமல், “அவரையே மணப்பேன்“ என உறுதியுடன் இருந்தாள்.

திருமணம் நடந்தேறியது.

அரண்மனை வாசம், சுகவாழ்வு என சொர்க்க போகத்தில் திளைத்த சாவித்திரி, தான் விரும்பி ஏற்றுக்கொண்ட தன் கணவனுக்காக, காட்டிலே வாழ தலைப்பட்டாள். பார்வையற்ற தன் மாமன், அத்தையை மிகவும் பாசத்தோடு பராமரித்து பணியாற்றினாள்.

இன்னல்கள் பல வந்தாலும் இன்முகத்தோடு அவற்றை ஏற்று இல்லறம் என்னும் நல்லறத்தை நடத்தி வந்தாள்.

ஓராண்டு கழிந்தது.... சத்யவானின் இறுதிநாள் வந்தது. இதனை அறிந்த சாவித்திரி அன்று முழுவதும் கணவனை பிரியவே இல்லை.

இருவரும் ஒன்றாகவே காட்டை வலம் வந்தனர். பழம் பறித்துக் கொண்டிருந்த வேளையில் திடீரென மயங்கி விழுந்த சத்தியவான், மாண்டு போனான்.

எமதர்மன், சத்தியவானின் உயிரை எடுத்துச் செல்வதை தன் கற்புத் திறத்தால் உணர்ந்த சாவித்திரி எமனைப் பின் தொடர்ந்து சென்றாள்.

உயிரை மீட்க உபாயம் வேண்டி!

தன்னைப் பின்தொடர்ந்து வரும் சாவித்திரியைப் பற்றி, தன் ஞானத்தால் உணர்ந்த எமதர்மன், “பெண்ணே, என்னைப் பின் தொடர

காரணம் என்ன" எனக்கேட்க, சற்றும் தயங்காத சாவித்திரி, "நான் என் கணவருடன் வாழ விரும்புகிறேன். அவரது உயிரை திருப்பிக் கொடுங்கள்", என வேண்டினாள்.

எமதர்மனோ, "இறப்புக்குப் பிறகு எவருக்கும் வாழ்வு கிடையாது! எடுத்த உயிரை திருப்பிக் கொடுக்க என்னால் இயலாது", என விளக்கினார்.
ஆனால்,
விடாப்பிடியாக சாவித்திரி, "பிரபு, நான் பதிவிரதை என்பது உண்மையானால், என் கற்பின் ஒழுக்கத்தை நீங்கள் மதிப்பதானால் என் கணவன் உயிரை எனக்குத் தாருங்கள்", என்றாள்.

எமதர்மன் யோசித்து, "உன் கற்புத்திறத்தை நானறிவேன்! கணவன் இறக்கப் போவதை அறிந்தும் அவனை மணந்தாய்; பார்வையற்ற முதியோர்களுக்கு பணிவிடை செய்தாய்; அனைத்தும் அறிந்தேன். ஆனால், சத்தியவானின் உயிரை தவிர வேறு என்ன வரம் கேட்டாலும் தருவேன் என்றார்.

மனம் தளராமல், சற்றே யோசித்த சாவித்திரி, "என் மாமனார், மாமியாருக்கு கண் பார்வை தெரிய வேண்டும்", எனக்கு நூறு குழந்தைகள் பிறக்க வேண்டும்; அந்த பேரன், பேத்திகளை எனது மாமன், மாமியார் கொஞ்சி மகிழ்ந்து சீராட்டி வளர்க்க வேண்டும்! இந்த வரங்களைத் தர வேண்டும் பிரபு", என பணிவுடன் வேண்டி நின்றாள்.

## சத்தியவானின் உயிரை மீட்ட சாவித்திரி



சற்றும் யோசிக்காத எமதர்மன், "உன் எண்ணம் போல் வாழ்வாய்! நீ கேட்ட அனைத்து வரங்களையும் தந்தேன்," என அருளினார். அதோடு, தான் செல்வதற்காக அடியெடுத்து வைத்தார்.
அவரை அழைத்த சாவித்திரி, "சுவாமி.... நான் நூறு குழந்தைகள் பெற வேண்டுமென்றால் என் கணவர் வேண்டுமே; அவரது உயிரைக் கொடுத்தால் தானே அது சாத்தியமாகும்", என்று கேட்க, "ஆஹா... தன் அறிவு நுட்பத்தால் என்னிடம் வரங்கள் பெற்று, சத்தியவான் உயிரைக் கேட்கிறாளே... என்ன ஒரு விவேகி இவள்?!", என வியந்த எமதர்மன், "இந்த கற்புக்கரசியின் அறிவு வலையில் சிக்கி விட்டேன்; வேறு வழியில்லை", என எண்ணி, சத்தியவானின் உயிரை விடுவித்து வாழ்த்திவிட்டு சென்றார்.
இந்த நிகழ்வு, அதாவது சத்தியவானின் உயிரை மீட்க சாவித்திரி நடத்திய இந்த உயிர் மீட்புப் போராட்டம் நடந்தது, மாசி மாதத்தின் இறுதி நாள் இரவிலிருந்து பங்குனி மாதம் முதல் நாள் காலை வரை என்பதால் இந்த வேளையே காரடையான் நோன்பிற்கும் ஏற்ற தினமாக கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது.

இந்த விரதம் இருப்பதன் மூலமாக சுமங்கலிப் பெண்களின் மாங்கல்ய பலம் பல மடங்கு பெருகுவதோடு கணவனின் ஆயுளும் நீடிக்கும் என்பது அசைக்க முடியாத நம்பிக்கையாக இன்றுவரை தொன்றுதொட்டு அனுஷ்டிக்கப்படுகிறது.

# மார்ச் மாத பலன்கள் – 2022

~ ஆஸ்ட்ரோவேட் ஜோதிடர் மு. செந்தில் நாதன்




குடும்பத்தில் உள்ளவர்களிடம் மதிப்பும் மரியாதையும் கூடும். திருமணமான தம்பதியர் மனமொத்து வாழ்வார்கள். இந்த மாதம் உங்கள் நிதிநிலை ஏற்ற இறக்கத்துடன் காணப்படும். கடன் வாங்கும் வாய்ப்புகள் உள்ளது. வீடு மற்றும் வாகனம் சம்மந்தப்பட்ட பராமரிப்பு செலவுகள் ஏற்படும். நீங்கள் ஆன்மீக விஷயங்களுக்காகவும் பணத்தை செலவு செய்வீர்கள். தனியார் உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு இந்த மாதம் வளர்ச்சி காணும் வகையில் கிரக நிலைகள் இல்லை. அரசு துறையில் வேலை செய்யும் தங்களின் கடின உழைப்பிற்கு அங்கீகாரம் கிடைக்காமல் போகலாம். சக பணியாளர்களுடன் கருத்து வேறுபாடு ஏற்பட வாய்ப்புள்ளது. வீண் வக்குவாத்தை தவிர்பது நன்மை பயக்கும். வெளிநாட்டில் பணியில் இருப்பவர்களுக்கு இந்த மாதம் சிறப்பாக இருக்கும். தன்னுடன் பணிபுரிபவர்களிடம் சுமூகமான உறவு ஏற்படும். அதன் மூலம் நீங்கள் ஆதாயம் பெறுவீர்கள். பாரம்பரிய தொழிலை விரிவாக்கம் செய்வதற்கு ஏற்ற மாதம் ஆகும். உங்கள் திறமை மேலதிகாரிகளால் பாராட்டப்படும். உங்களுக்கு பதவி உயர்வு கிடைப்பதற்கான வாய்ப்பு உள்ளது. மாணவர்களின் கிரகிக்கும் திறன் கூடும். கல்வியில் சிறந்து விளங்குவார்கள். வெளிநாட்டில் உயர்கல்வி படிப்பதற்கான வாய்ப்புகள் கிடைக்கும்.

சுப நாட்கள்:
4, 5, 7, 8, 9, 13, 14, 15, 16, 20, 21, 27, 28, 29, 30.
அசுப நாட்கள்:
1, 2, 3, 6, 10, 11, 12, 17, 18, 19, 22, 23, 24, 25, 26, 31.



# ரிஷபம்

காதல் உறவில் உள்ளவர்கள் தனது துணையின் உணர்வுகளைப் புரிந்து கொண்டு நடந்து கொள்ள வேண்டியது அவசியம். கணவன் மனைவிக்கு இடையே தாம்பத்திய உறவில் நெருக்கம் அதிகரிக்கும். குடும்பத்தில் உள்ள வயதில் மூத்தவர்களின் ஆதரவு கிடைக்கப் பெறுவீர்கள். உங்களுக்கு இசையின் மீது ஆர்வம் அதிகரிக்கும். குடும்பத்தில் திருமணம் போன்ற சுப நிகழ்ச்சிகள் நடைபெறுவதற்கு வாய்ப்புகள் உள்ளது. அழகுசாதன பொருட்கள் விற்பனை செய்யும் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்கள் கணிசமான வருமானம் காண்பார்கள். உணவுத்துறை சார்ந்த தொழில் புறிபவர்கள் சிறந்த வகையில் லாபம் ஈட்டுவார்கள். பங்கு மற்றும் பொருள் வர்த்தகத்தை பொருத்தவரையில் ஏற்றம் நிறைந்து காணப்படும். அரசு உத்தியோகத்தில் உள்ள நீங்கள் இந்த மாதம் நீங்கள் கடுமையாக உழைப்பதன் மூலம் உத்தியோகத்தில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் இருக்கும். இந்த மாதம் கூட்டுத் தொழில் சிறப்பாக இருக்கும். குறிப்பாக பிரயாணம் மற்றும் உணவு சம்பந்தப்பட்ட தொழில் புரிபவர்களுக்கு நல்ல லாபத்தை அளிக்கும் மாதமாக இருக்கும். மென்பொருள் தொழிலில் உள்ளவர்கள் நல்ல ஏற்றத்தை காண்பார்கள். சுயதொழிலில் நல்ல வருமானத்தை காண்பதன் மூலம் தொழிலில் முன்னேற்றம் உண்டாகும். தொழில் தொடர்பான பயணங்கள் உங்களுக்கு நன்மை அளிக்கும். துரித உணவு வகைகளைத் தவிர்ப்பது நன்மை பயக்கும். படித்து முடித்து வேலை தேடும் மாணவர்கள் சிறந்த சம்பளத்துடன் கூடிய வேலை கிடைக்கப் பெறுவார்கள். போட்டித்தேர்வு எழுதும் மாணவர்கள் தேர்வில் வெற்றிபெறுவார்கள்.


சுப நாட்கள்:

4, 5, 8, 9, 13, 14, 15, 16, 20, 26, 27, 28, 29, 30.

அசுப நாட்கள்:

1, 2, 3, 6, 7, 10, 11, 12, 17, 18, 19, 21, 22, 23, 24, 25, 31.

# மிதுனம்




காதலில் வெற்றி கிடைக்கும். திருமணத்திற்குக் காத்திருப்பவர்களுக்கு ஏற்ற வாழ்க்கை துணை அமையும். திருமணமான தம்பதிகளுக்கு இடையே நல்லுறவு காணப்படும். உங்கள் தம்பி மற்றும் தங்கை உடனான புரிதல் நன்றாக இருக்கும். இந்த மாதம் யூக வணிகமான பிட் காயின் மற்றும் போரெக்ஸ் டிரேடிங் முதலீடுகள் மூலம் நல்ல லாபங்களை எதிர்பார்க்கலாம். பொருள் வர்த்தகத்தில் அதிக லாபத்தை எதிர்பார்க்க முடியாது. மியூச்சுவல் பண்ட் முதலீடுகள் நல்ல லாபத்தை கொடுக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு இந்த மாதம் சிறப்பாக இருக்கும். தன்னுடன் பணிபுரிபவர்களிடம் சுமூகமான உறவு ஏற்படும். உத்தியோகத்தை பொருத்தவரை விளம்பரத்துறை மற்றும் தகவல் தொடர்புத் துறையில் பணி புரிபவர்களுக்கு இது சிறந்த மாதமாக இருக்கும். ஏற்றுமதி தொழிலில் நல்ல வருமானத்தை காண்பதன் மூலம் தொழிலில் முன்னேற்றம் உண்டாகும். சுயதொழிலில் லாபம் ஏற்றம் மிகுந்து காணப்படும். கூட்டுத்தொழிலில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். பட்டு ஜவுளி தொழிலில் அதிக லாபத்தை எதிர்பார்க்கலாம். உங்கள் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்த வேண்டும். தாயாரின் உடல் நலனில் அக்கறை தேவை. பள்ளிக்கல்வி பயிலும் மாணவர்கள் கவனச் சிதறல் போன்ற தடைகளையும் தாண்டி கல்வியில் வெற்றி காண்பார்கள்.

சுப நாட்கள்:

4, 5, 8, 9, 13, 14, 15, 16, 18, 20, 21, 22, 23.

அசுப நாட்கள்:

1, 2, 3, 6, 7, 10, 11, 12, 17, 19,



# கடகம்

உங்கள் வார்த்தைகளில் இனிமை இருக்கும். இதன்மூலம் உங்கள் காதல் துணையைக் கவர்வீர்கள். திருமணம் செய்வதற்காக காத்திருப்பவர்களுக்கு திருமண வாய்ப்புகள் கைகூடும். கணவன் மனைவி உறவில் அன்யோன்யம் கூடும். தொலைத் தொடர்பு மற்றும் அறிவியல் துறையில் இருப்பவர்களின் தன நிலையில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். சுயதொழில் செய்பவர்களின் நிதிநிலையைப் பொறுத்தவரை பண வரவு குறைவாக இருக்கும். கூட்டுத்தொழிலில் பெரிய அளவில் லாபம் எதுவும் இருக்காது. உங்கள் ஆரோக்கியம் குறித்த செலவுகள் எழும் என்பதால் அதற்கு சிறிது பணத்தை நீங்கள் ஒதுக்கி வைத்துக் கொள்ள வேண்டும். வியாபாரத்தில் நல்ல லாபத்தை எதிர்பாக்கலாம். அரசு உத்தியோகத்தில் உள்ள உங்களுக்கு பாராட்டும் நல்ல பெயரும் கிடைக்கும். சுயதொழிலில் போட்டிகளை சந்திப்பீர்கள். வெளிநாட்டுத் தொடர்புடைய ஏற்றுமதி மற்றும் இறக்குமதி தொழில் செய்பவர்கள் இந்த மாதம் அதிக தன வரவைக் காண்பார்கள். பள்ளிக்கல்வி படிக்கும் மாணவர்கள் தேர்வுகளில் வெற்றி பெற்று நல்ல நிலைக்கு உயர்வார்கள். உயர்கல்வி படிக்கும் மாணவர்கள் விடாமுயற்சியுடன் செயல்பட்டு முன்னேற்றம் காண்பார்கள். ஆராய்ச்சி படிப்பு படுக்கும் மாணவர்கள் ஆராய்ச்சி படிப்பை வெற்றிகரமாக முடித்து வெளிநாட்டிற்கு செல்லும் வாய்ப்பு உள்ளது.

சுப நாட்கள்:

4, 5, 7, 8, 9, 13, 14, 15, 16, 18, 20, 21.

அசுப நாட்கள்:

1, 2, 3, 6, 10, 11, 17, 27, 28, 29, 30, 31.

# சிம்மம்



காதல் உறவில் பிரச்சனையுடன் இருந்தவர்களுக்கு பிரச்சனை தீர்ந்து நல்லுறவு நீடிக்கும். கணவன் மனைவிக்கு இடையே நல்லுறவு கூடும். தாய் மற்றும் தந்தையின் உடல் நலனில் அக்கறை தேவை. இந்த மாதம் உங்கள் பணப்புழக்கம் அதிகரிக்கும் வாய்ப்பு உள்ளது, செலவுகள் கட்டுக்குள் இருக்கும். கலைத் துறையில் இருப்பவர்கள் சிறந்த வகையில் வருமானம் ஈட்டுவார்கள். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு பணியில் உயர்வு ஏற்படும். வருமானத்தில் உயர்வும் கிடைக்கும். உங்கள் கடின உழைப்பிற்கு மேலதிகாரிகளின் அங்கீகாரமும் பாராட்டும் கிடைக்கும். பணி நிமித்தமான பயணங்கள் அனுகூலமாக இருக்கும். வியாபாரத்தில் மிதமான லாபத்தை எதிர் பார்க்கலாம். நீங்கள் தொழிலில் புதிய யுத்திகளைக் கையாள்வதன் மூலம் வெற்றி காண்பீர்கள். ஆர்கிடெக்சர் துறையை சேர்ந்தவர்களுக்கு தொழிலில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். உங்கள் உணவில் கவனம் செலுத்த வேண்டும். பள்ளிக்கல்வி பயிலும் மாணவர்கள் ஆசிரியர் மற்றும் பெற்றோரின் வழிகாட்டுதல்களைப் பின்பற்றி கல்வியில் வெற்றி காணலாம்.

சுப நாட்கள்:

4, 5, 7, 15, 16, 18, 23, 24, 27, 28, 29, 30.

அசுப நாட்கள்:

1, 2, 3, 6, 17, 25, 26.



# கன்னி

காதல் உறவில் உள்ளவர்களுக்கு நெருக்கம் அதிகாரிக்கும். திருமண உறவில் நல்லிணக்கம் காண நீங்கள் கடின முயற்சிகளை மேற்கொள்ள வேண்டியிருக்கும். தாயார் உடல் நலனில் அக்கறை தேவை. நீங்கள் வாங்கிய கடனை திருப்பிச் செலுத்த இது ஏற்ற மாதமாகும். வாகனம் சம்மந்தப்பட்ட செலவுகள் ஏற்படும். ஆடைகள் தயாரிக்கும் தொழிலில் நல்ல தன வருவாய் கிடைக்கும். தங்க நகை தொழில் செய்பவர்களுக்கு அதிக வாடிக்கையாளர்கள் கிடைப்பதன் மூலம் நல்ல லாபம் கிடைக்கும். தொழில் காரணமாக வெளிநாடு செல்லும் வாய்ப்பு உண்டாகும். கூட்டுத்தொழில் மூலம் அதிக லாபங்களை எதிர்பார்க்கலாம். சுய தொழிலில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். நல்ல தொழில் வாய்ப்புகள் உண்டாகும். வாக்குவாதத்தை தவிர்க்க வேண்டும். இந்த மாதம் பெரிய அளவிலான ஆரோக்கிய பாதிப்புகள் ஏதும் இருக்காது. நோய் வந்தாலும் எளிதில் குணமாகும். ஆரோக்கிய உணவு பழக்கத்தின் மூலம் உங்கள் நோய் எதிர்ப்புத் திறன் அதிகரித்து காணப்படும். கணித துறை சார்ந்த மாணவர்கள் சிறப்பாகக் கல்வி பயின்று கல்வியில் வெற்றி காண்பார்கள்.


சுப நாட்கள்:
4, 5, 9, 13, 14, 15, 16, 18, 20, 21, 22.
அசுப நாட்கள்:
1, 2, 3, 6, 7, 8, 9, 10, 11, 12, 17.

# துலாம்



காதலர்களுக்கு இடையே நெருக்கம் அதிகாரிக்கும். கணவன் மனைவிக்கு இடையே அன்யோன்யம் கூடும். புதிய நண்பர்கள் கிடைப்பார்கள். தாய் தந்தையாரிடம் நல்லுறவு நீடிக்கும். வீட்டில் உள்ள பெரியவர்களின் உடல் நலனில் அக்கறை தேவை. இந்த மாதம் உங்களின் பொருளாதார நிலை சிறப்பாக இருக்கும். யூக வணிகத்தின் மூலம் நல்ல லாபங்களை ஈட்ட முடியும். சொகுசான வாழ்கையை ஏற்படுத்திக்கொள்ள அதிகம் ஆடம்பர செலவுகள் செய்யும் வாய்ப்புகள் உள்ளது. வெளிநாட்டு வேலை வாய்ப்புகளை பெறுவீர்கள். மேலதிகாரிகளுடன் இணைந்து பணியாற்றவேண்டிய சூழ்நிலை ஏற்படும். உத்தியோகத்தில் பொறுப்புகள் கூடும். உத்தியோகத்தில் சாதனைகளைப் புரிவதற்கு வாய்ப்புகள் உள்ளது. இந்த மாதம் சுய தொழிலில் சிறிது முன்னேற்றம் காணப்படும். பணம் சார்ந்த தொழில் செய்பவர்கள் இந்த மாதம் அதிக லாபத்தை காண்பார்கள். கூட்டுத்தொழிலில் போட்டிகள் ஏற்பட வாய்புகள் உள்ளது. இந்த மாதம் சிறு சிறு உடல் உபாதைகள் வந்து போகும். அதிக கொழுப்பு மற்றும் காரம் நிறைந்த உணவு வகைகளைத் தவிர்ப்பது நன்மை பயக்கும். பள்ளிக்கல்வி பயிலும் மாணவர்கள் நல்ல மதிப்பெண்களுடன் கல்வியில் தேர்ச்சி பெறுவார்கள்.

சுப நாட்கள்:
5, 7, 8, 9, 23, 24, 27, 28, 29, 30.
அசுப நாட்கள்:
1, 2, 3, 4, 11, 12.



## விருச்சிகம்

திருமணமான தம்பதிகள் ஒருவருக்கொருவர் பரஸ்பரம் விட்டுக் கொடுத்து செல்வதால் அன்யோன்யம் அதிகரிக்கும். மூத்த உடன் பிறப்புகள் உங்களுக்கு ஆதரவாக இருப்பார்கள். குடும்பத்தில் நல்லுறவு நீடிக்கும். குடும்பப் பொறுப்புகள் அதிகரிக்கும். தொழில் நுட்பத்துறை மற்றும் தொலைத் தொடர்பு துறையில் இருப்பவர்களின் தன நிலையில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். ஷேர் மார்க்கெட் முதலீட்டுகள் மூலம் உங்களுக்கு நல்ல லாபம் கிடைக்கும். பொருள் வர்த்தகம் ஏற்றம் நிறைந்து காணப்படும். வங்கிப்பணி மற்றும் அயல்நாட்டு வர்த்தகத்தில் ஈடுபடும் நிறுவனங்களில் உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு பணி உயர்வு கிடைக்கும். அரசுத்துறையில் பணியில் உள்ள உங்களின் கடின உழைப்பிற்கு மேலதிகாரிகளின் அங்கீகாரமும் பாராட்டும் கிடைக்கும். தனியார் நிறுவனத்தில் பணி செய்யும் இடத்தில் புதிய பொறுப்புகள் தேடிவரும், பணிச்சுமை அதிகரித்து காணப்படும். சுயதொழில் செய்பவர்கள் தங்கள் இலக்குகளை அடைய அதிக முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். கூட்டுத்தொழிலில் போட்டிகளை சந்திப்பீர்கள். ஏற்றுமதி மற்றும் இறக்குமதி தொழில் செய்பவராக இருந்தால் அதிக லாபத்தை காண முடியும். இந்த மாதம் உங்கள் ஆரோக்கியம் சவால் மிக்கதாக இருக்கும். சிறிய அளவிலான உடல் உபாதைகள் என்றாலும் நீங்கள் உடனடியாக மருத்துவரை கலந்து ஆலோசிக்க வேண்டும். உயர்கல்வி படிக்கும் மாணவர்கள் போட்டித் தேர்வுகளில் வெற்றி பெற்று நல்ல உத்தியோகம் அமையும்.


சுப நாட்கள்:

7, 8, 9, 27, 28, 29, 30.

அசுப நாட்கள்:

1, 2, 3, 10, 11, 12.

## தனுசு



காதலர்களுக்கு இடையே அன்னியோன்யம் கூடும். கணவன் மனைவி இடையே கருத்து வேறுபாடுகள் நீங்கி ஒற்றுமை நிலவும். உறவினர்கள், நண்பர்கள் என அனைவரிடமும் நல்ல சுமுகமான உறவு நிலை காணப்படும். குடும்ப உறவுகளுக்கு முக்கியத்துவம் அளிப்பீர்கள். உங்கள் பொருளாதார நிலை ஏற்றம் காணும் வகையில் கிரக நிலைகள் உள்ளன. கல்வித்துறை மற்றும் பொறியியல் துறையில் இருப்பவர்கள் சிறந்த வகையில் வருமானம் ஈட்டுவார்கள். பங்கு வர்த்தகத்தில் முக்கியமான முடிவுகள் எதையும் இந்த மாதம் எடுக்காதீர்கள். புதிய உத்தியோக வாய்ப்புகள் மூலம் நீங்கள் முன்னேற்றம் காண்பீர்கள். நீங்கள் ஊடகங்களில் பணி புரிபவர் என்றால் இந்த மாதம் உங்களுக்கு அதிர்ஷ்டமான மாதம் என்று கூறலாம். இந்த மாதம் சுயதொழில் சிறப்பாக இருக்கும். குறிப்பாக பிரயாணம் மற்றும் உணவு சம்பந்தப்பட்ட தொழில் புரிபவர்களுக்கு நல்ல லாபத்தை அளிக்கும் மாதமாக இருக்கும். கூட்டுத்தொழில் செய்பவர்களுக்கு இந்த மாதம் சிறந்த பலன்கள் கிட்டும். தொழில் வல்லுனர்களான நீங்கள் தன்னம்பிக்கையுடன் செயல்பட்டு பணிகளை திறம்பட செய்து முடிப்பீர்கள். பேச்சில் கவனமும் நிதானமும் தேவை. கடுமையான வார்த்தைகளைத் தவிருங்கள். பள்ளிக்கல்வி பயிலும் மாணவர்கள் சுமாரான பலன்களைக் காண்பார்கள்.

சுப நாட்கள்:

4, 5, 7, 8, 9, 16, 20, 21, 22, 23, 24, 27.

அசுப நாட்கள்:

6, 10, 11, 12, 13, 14, 15, 25, 26, 31.



# மகரம்

உங்கள் காதல் துணையைக் கவர்வீர்கள். திருமணமான தம்பதியர் மனமொத்து வாழ்வார்கள். நண்பர்களிடம் கருத்து வேறுபாடு ஏற்பட வாய்ப்பு உள்ளது. வாக்கு வாதத்தை தவிர்ப்பது நன்மை பயக்கும். உறவினர்களிடம் நல்ல சுமுகமான உறவு நிலை காணப்படும். கூட்டுத்தொழில் செய்பவர்களின் நிதி நிலையைப் பொறுத்தவரை தன வரவு குறைவாக இருக்கும். பங்கு மற்றும் பொருள் வர்தக நிறுவனங்களில் முதலீடு செய்வதர்க்கும் லாபங்களை ஈட்டுவதற்கும் இந்த மாதம் ஏற்றதாக உள்ளது. உத்தியோகம் நிமித்தமாக வெளியூர் செல்லும் வாய்ப்பு உள்ளது. இந்த மாதம் அரசு உத்தியோகத்தில் பணிபுரியும் உங்களுக்கு வெற்றி வாய்ப்பு தேடிவரும். இந்த மாதம் கூட்டுத் தொழில் சிறப்பாக இருக்கும். குறிப்பாக உணவு மற்றும் கேளிக்கை விடுதி சம்பந்தப்பட்ட தொழில் புரிபவர்களுக்கு நல்ல லாபங்களை அளிக்கும் மாதமாக இருக்கும். சுய தொழிலில் முதலீடுகளை மேற்கொள்ளும் போது கவனம் தேவை. உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். மாணவர்கள் பொறுமையுடன் கடினமாக உழைத்துப் படித்தால் வெற்றி நிச்சயம்.

சுப நாட்கள்:

13, 14, 15, 20, 21, 22, 23, 24, 27, 28, 29, 30.

அசுப நாட்கள்:

16, 17, 18, 19, 25, 26, 31.

# கும்பம்




இந்த மாதம் காதல் கைகூடும். குடும்பத்தில் அன்பும் அமைதியும் நிலவும். குடும்ப பொறுப்புகள் கூடும். மூத்த சகோதரத்தின் மூலமாக தன உதவிகள் கிடைக்கும். திருமணத்திற்காக காத்திருப்பவர்களுக்கு திருமணம் கைகூடும். கணவன் மனைவிக்கு இடையே நல்லிணக்கம் கூடும். குடும்பத்தில் உள்ளவர்களுக்கு இடையே நல்லுறவு நீடிக்கும். கூட்டுத்தொழில் செய்பவர்களுக்கு நல்ல வருமானம் கிடைக்கும். அதன் மூலம் தன நிலையில் ஏற்றம் உண்டாகும். இந்த மாதம் உங்களின் பழைய வங்கிக்கடன் அடைபடும். பங்கு வர்த்தகத்தின் மூலமாக நல்ல தன லாபத்தை எதிர்பார்க்கலாம். பணியில் உயர்வுடன் வருமானத்தில் உயர்வும் ஏற்படும். தனியார் உத்தியோகத்தில் பணி செய்யும் உங்களுக்கு வேலை செய்யும் இடத்தில் பொறுப்புகள் அதிகரிக்கும். இந்த மாதம் கூட்டுத் தொழில் சிறப்பாக இருக்கும். சுய தொழில் செய்பவர்கள் அதிக லாபத்தை எதிர்பார்க்கலாம். இந்த மாதம் வெளிநாட்டு ஏற்றுமதி தொழில் செய்வதற்கான வாய்ப்புகள் உண்டாகும். நவீன முறைகளை பயன்படுத்தி செயலாற்றுதன் மூலமும் வெற்றி பெறுவீர்கள். உத்தியோகத்தில் அதிக பணிச்சுமை உங்கள் ஆரோக்கியத்தைப் பாதிக்கும். தாயாரின் உடல் நலனில் அக்கறை தேவை. மாணவர்களுக்கு இது சிறந்த மாதமாக இருக்கும். தொலை நிலை கல்வி மூலம் உயர்கல்வி படிக்கும் மாணவர்கள் கவனமுடன் படிப்பார்கள்.

சுப நாட்கள்:

4, 5, 7, 8, 9, 13, 14, 15, 16, 22, 23, 24.

அசுப நாட்கள்:

1, 2, 3, 6, 10, 11, 12, 17, 18, 19, 20.



# மீனம்

காதல் உறவில் உள்ளவர்களுக்கு இடையே நெறுக்கம் அதிகரித்து காணப்படும். இந்த மாதம் திருமண முயற்சிகள் கைகூடும். கணவன் மனைவிக்கு இடையே நல்ல இணக்கமான உறவு நிலை ஏற்படும். இந்த மாதம் நிலம் மற்றும் வீடு வாங்குவது லாபம் மிகுந்ததாக இருக்கும். வாழ்க்கைத் துணை மூலம் தன நிலை அதிகரிக்கும். அரசு துறையில் வேலை செய்பவர்களின் வருமானத்தில் ஏற்றம் இருக்கும். கடன் வாங்கும் சூழ்நிலையும் உள்ளது. கணக்குகளை பராமரிப்பதில் கவனம் தேவை. தனியார் உத்தியோகத்தில் இருப்பவர்களின் பணி செய்யும் இடத்தில் மதிப்பும் மரியாதையும் கூடும். அரசுத் துறையில் பணி புரிபவர்களுக்கு உத்தியோக உயர்வு மற்றும் வருமானத்தில் உயர்வும் உண்டு. சுற்றுலா சம்மந்தப்பட்ட துறையில் பணிபுரிபவர்களுக்கு பணியில் நல்ல ஆதாயம் உண்டு. சுயதொழில் சிறப்பாக இருக்கும். பங்கு வர்த்தகம் மற்றும் பொருள் வர்த்தகத்தில் நல்ல ஏற்றத்தையும் தன லாபத்தையும் காணலாம். உங்கள் ஆரோக்கியம் சுமாராக இருக்கும். பெரிய அளவிலான உடல் நல பாதிப்புகள் ஏதும் இருக்காது. மாணவர்கள் பதட்டமின்றி செயல்பட்டு கல்வியில் முதன்மை பெறுவார்கள்.

சுப நாட்கள்:
15, 16, 18, 20, 23, 24, 27, 28, 29, 30,
அசுப நாட்கள்:
1, 2, 3, 21, 22, 25, 26, 31.


## உங்கள் கருத்துக்கள் எங்கள் இதழில் இடம் பெற வேண்டுமா?

இனிய சத்வித்யா வாசகர்களே! நமது மாத இதழில் உங்கள் ஆன்மீகக் கட்டுரைகளும் கருத்துக்களும் இடம் பெற வேண்டுமா? உங்களுடைய அரிய ஆன்மீக படைப்புகளை எங்களுக்கு அனுப்புங்கள்! தகுதியானவை ஏற்றுக்கொள்ளப்படும் கட்டுரைகள் கடிதங்கள் அனுப்ப வேண்டிய முகவரி

Astroved.com Pvt.Ltd
“சத்வித்யா” ஆன்மீக மாத இதழ்,
SP-75, தொழிற்பேட்டை, அம்பத்தூர்,
சென்னை - 600058.